விலை 0—1—3 ஆண்டுச்சந்தா ரூபா 5 இலங்கை 10 சதம் மலாய்.நாடு 8 காசு REGD. No. M. 4642

# திராவிடநாடு

மலர் 5 | காஞ்சிபுரம் 26—1—47 | இதழ் 37



## மாவீரன் மாட்சி

கொடுங்கோலாட்சி தனை எதிர்க்க
குணமும் திறனும் அற்றிருந்தார்
கோபுரவாயிலில் தீருமென்பார் கோடி
கோடியாயின குறைகளெல்லாம்.

யாரிவர்க்களிப்பர் அறிஉடைமை?
ஆமைகளல்லவோ! என்றுரைத்தார்.
பாடுபட்டே மக்கள் பசித்திருக்க
படுபாவி ஜாருமே கொழுத்திருக்க
தானினன் அறிவின் பொறிகளையே
துயர் அறுக்க வந்த மாவீரனுமே.

கேட்டதில்லை முன்பு இதுபோன்றே
பலகேடுகள் போக்கிடும் புதுமுறையை
உழைப்பவர் உரிமை பெற்றிடவே
உண்டு ஓர் வழி என முரசறைந்தான்.

சீறின படைபலம் பற்பலவாய்
அவன் சிரத்தைக் கொய்திடும் நோக்
குடனே
ஓடினன் ஓடினன் ஊரெங்கும் புது
உண்மை உரைத்துப்படைதிரட்ட.

வயலெல்லாம் வீடெல்லாம் அவன்நாமமே
வஞ்சகர் நினைப்பெல்லாம் அவன்மீதே
ஆலைகள் சோலைகள் எங்கெங்கும்
அவன் ஆற்றல்படை பலதிரண்டனவே
அவிழ்த்துவிட்டான்ஜாரும்அடக்குமுறை
அதன் ஆர்ப்பாட்டம தனையும் தாங்கி
நின்றார்

ஒடிந்தது கொற்றவன் வாளின்கூரே
உள்ளம் அழிந்தனர் கோபுரநாதர்களும்
வாழ்வுக்கும் உரிமைக்கும் போரிடுங்கள்
வஞ்சகர் கூட்டத்தின் வேரறுங்கள்
மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை

நம்மைமாட்ட நினைக்கும் சிறைச்சாலை
எங்கவிடோம் ஏழை கூட்டமதை!
எல்லோரும் எல்லாமும் பெற்றிடலாம்
தூங்கியிருந்தது போதும் இன்றே

துயர் போக்கப்போரிடுஎன்றழைத்தான்
மாவீரன் மொழிகேட்டமக்கட் கூட்டம்
மண்வெட்டி கோடலிதனையெடுத்து
மதித்திடோம் ஜாரினை, கூட்டத்தினை
என்று
கூவிக்கிளம்பினர் வேகம்தாய்.

உருண்டன உலுத்தரின் சிரம்பலவும்
மருண்டனர் சுருண்டனர்ஜாரின்கும்பல்
புரண்டது குருதியின் வெள்ளம் அங்கு
பூத்ததுபுன்னகை, பொதுஉடைமை.

வாழ்கலெனின்! என்றார் வாழ்த்திடவே
ஒருவகையுள்ள புதுதிட்டம் கண்ட
மக்கள்
நீங்கிற்று கோனாட்சி கொடுமையாட்சி
சிகரில் குடி ஆட்சி கண்டனரே.

இல்லாமை போதாமை என்பதில்லை,
அங்கு ஏழை செல்வவான் பேச்சுஇல்லை
மனிதரே வாழ்கின்றார் மனிதர் வாழ
மாநிலத்தோரும் மகிழ்ந்திருக்க.

மாவீரன் லெனினை மறந்திடோமே
அவன் மார்க்கம் மதிக்கத்தவறிடோமே
வாழ்க லெனின் என்போம் வாழ்த்
திடுவோம்
இனி வையகம் மேற்கொள்ளும்
சமதர்மமே





தாகமென்று வருபவர்க்குத்
தண்ணீரை அளியாமல்
ஆகமங்கள் ஓதிநிற்றல்
அழகாமோ? அறமாமோ?

—தேசிக விநாயகம்.

# ★ ரங்கோன் ராதா ★

சௌமியன்.

எந்தத் தங்கத்தால் என் வாழ்வு சீர்குலைக்கப்பட்டதோ அவளிடமே சென்று, குறையைக்கூறி உதவி கோரினேன். அவள் இதனால் கர்வம் கொண்டாலும் சரி, மேலும் என்னைக் கொடுமைக்காளாக்கினாலும் சரி என்று துணிந்தே இதைச்செய்தேன். ஆனால் நான், சிந்தாமணி விஷயமாகக் கூறியதும், தங்கம், என்னைவிட அதிர்ச்சியடைந்தாள், என்பது அவள் பேச்சாலேயே நன்கு தெரிந்தது. கண்களில் நீர் ததும்ப அவள் அசைவற்று நின்றுகொண்டிருந்தாள். அவள் மனதிலே என்னென்ன எண்ணினளோ? என்குறையை என் நிலைக்கு அவள் வருந்திக்கொண்டிருந்தாள். தங்கமும் ரங்கமாகித்தானே தீரவேண்டும் பதியவன் வந்து சேர்ந்தால்! தங்கம், ரங்கம் என்ற தனிப்பட்டபெயர்களைக்கூடத்தள்ளிவிடு தம்பி! பொதுவாகவே பெண்களுக்கு நிலைமைஇதுதானே.. ஒருநாள் ராதா, ரங்கோனில் யாரோ ஒருபுலவர் எழுதிய பாட்டைப்படித்துக்கொண்டிருந்தாள். என்னடி எழுதியிருக்கு அதிலே? அவ்வளவு சுவாரஸ்யமாகப் படிக்கிறாயே என்று கேட்டேன். பெண்களின் முகத்தைச் சந்திரபிம்பம் என்று வர்ணிக்கிறார்களே, அதைப்பற்றி ஒரு புலவர் அழகாக எழுதி இருக்கிறார் என்றாள். இதிலே என்ன புது அதிசயம் கண்டுவிட்டாயோ; நாம் கூடத்தான் நம் குழந்தைகளை ஏதேதோ சொல்லிக் கொஞ்சுகிறோம். நமக்கு எதெது கிடைக்கவேண்டுமென்று எண்ணுகிறோமோ, எவைஎவையிலே உயர்ந்தவை, மதிக்கத்தக்கவை என்று எண்ணுகிறோமோ அந்தப்பொருளின் பெயரை வைத்துக் குழந்தையைக் கூப்பிட்டுக்கொஞ்சுகிறோம். இதுபோலவே, பெண்களைப்பலகாலமாகப் புகழ்ந்து வருகிறார்கள் என்றேன். "அம்மா! நீ சொல்வதுதான் உண்மை. ஆனால் இதைப்படிக்கும் போது எனக்கு வேறோர் விஷயம் புலப்பட்டது. முகம் சந்திரபிம்பம் என்றார் கவி. அது சரியோ தவறோ, பெண்களின் வாழ்வு சந்திரன்போலத்தான் இருக்கிறது. இருண்ட இடத்துக்கு ஒளி; வெப்பம் நீக்கும் குளிர்ச்சி; பார்க்க ஆனந்தம், இவ்வளவும் நிலவும் தருகிறது, நாமும் தருகிறோம். ஆகையால் பெண்களின் முகத்துக்கு நிலாவை உவமை கூறுவதைவிட, பெண்களுக்கே நிலவை உவமைகூறலாம் என்றாள். "ஆமடி அம்மா! நிலவுக்கு இருப்பதுபோலத்தான் நமது வாழ்விலும், தேய்பிறையும் வளர்பிறையும் இருக்கிறது" என்று சொல்லிவிட்டு நான் வேதனையை மறைத்துக் கொள்வதற்காகச் சிரித்தேன். "அம்மா! அதை நான் அறியாமல் இல்லை. வளர்பிறை தேய்பிறை சந்திரனுக்கு இருப்பதுபோலத்தான் வனிதையர் வாழ்விலும் இருக்கிறது. வளர்பிறை, பூலோகத்துக்கு மகிழ்ச்சி தருகிறது, முழுநிலவுநாளை எவ்வளவோ ஆனந்தமாக இருக்கிறது. அதன் அழகிலே சொக்காதவர்கள் கிடையாது. கவிபாடுகிறான் களிப்புடன். பாமரருக்கும் ஏதோ ஓர் வகையான களிப்பு. நிலாக்காலம்—முழுநிலவுநாள்—இவைகளையே பல கதைகளிலே, அழகாகத் தீட்டுகிறார்கள். அதுபோலத்தானம்மா, பெண்களின் வாழ்விலும் முழுத்திருப்தியும் மகிழ்ச்சியும் கிளம்பி, ஒளி வீசினால், அதனால் பெண்களுக்கு மட்டுமல்ல, ஆடவர் உலகுக்கும் நன்மைதான் ஏற்படும். தேய்பிறையின்போது தெருவும் வீடும், சாலையும் சோலையும் இருண்டுவிடுகின்றன மக்கள் பாழ்ப்போன இருட்டுக்குப் பயந்து வீட்டோடு இருப்பார்கள். அருவருப்பு, பயம், இவைகளால் பீடிக்கப்படுகிறார்கள். முன் இருட்டு, பின் இருட்டு, முழு இருட்டு மை இருட்டு என்று விதவிதமாகப்பிரித்துக்காட்டி, வருத்தப்படுவார்கள். வெளியிலே உல்லாசமாக உலவவோ ஒளி இல்லை—வீட்டுக்குள்ளே இருந்தாலோ நிம்மதி இல்லை; இருட்டுக் காலமே கள்ளருக்கு வேலைமிகுதியான நாள், ஆகவே, வீட்டிலே உறக்கமுமற்றுக் கிடப்பர். இவ்வளவும், நிலவு இல்லாததால் வரும் கேடு. அதுபோலவே பெண்ணின் வாழ்வு இருண்டு கிடந்தால், கஷ்டம் பெண்ணுக்கு மட்டுமல்ல, ஆடவருக்குந்தான்" என்றாள் என் மகள். "ராதா! நீ சொல்வது சரி. ஆனால் பெண்களின் வாழ்வு ஏன் இப்படி வளர்பிறை தேய்பிறையாகவே இருக்கிறது? இதற்கு ஒரு மாற்றம் கிடையாதா? தேய்வது, வளர்வது மீண்டும் தேய்வது, அடியோடு இருண்டு போவது, முழு அழகுடன் பிரகாசிப்பது, என்றுள்ள இந்த முறை மாறக்கூடாததா? இதன் காரணத்தை அந்தப் புலவர் ஏதாவது கூறியிருக்கிறாரா?" என்று கேட்டேன். "அவர் ஏனம்மா அதைக் கூறப் போகிறார்? முகம் சந்திரபிம்பம் என்று ஆரம்பித்தவர், பாட்டின் நாலாவது அடி வருவதற்குள், கைலாயத்துக்கு அல்லவா போய்விட்டார்! நிலவின் அழகைக் கண்டு மயங்காதவர் இல்லை. மன்மதனையே சுட்டெரித்த சிவபெருமானே நிலவின் அழகிலே இலயித்து, பிறைச் சந்திரனைத் தமது ஜடையிலே சூட்டிக்கொண்டாரென்றால், நிலவின் அழகை விளக்கவும் வேண்டுமோ என்று அவர் ரொம்ப உயரம் போய்விட்டாரே! எப்படி அவர் பெண்ணினத்தின் வாழ்வு, நிலவுபோல இருக்கிறது என்பதுபற்றியோ அவர்கள் வாழ்வு ஏன் அப்படி இருக்க வேண்டும் என்பது குறித்தோ எழுதப் போகிறார்? சொல்லப்போனால் அம்மா! அவர் நிலவைப்பற்றிக்கூற ஆரம்பித்த நோக்கமே, அதே சாக்காக சிவபெருமானைப் பற்றிப் பாடலாம் என்றுதான், எனத் தெரிகிறது. புலவர்கள் மிக உயரமாக அல்லவா போகிறார்கள். தங்கள் காலடியில் காணப்படும் எந்த விஷயம்தான் அவர்களின் கண்ணுக்குத் தெரிகிறது." என்று கேட்டாள் ராதாவுக்கு, தம்பி! தமிழ் புத்தகங்களைப்படிப்பதென்றால் ரொம்பப் பிரியம், அதேபோது, புலவர்கள், எதை எதையோ எழுதுகிறார்களே யொழிய, வாழ்க்கையிலே காணப்படும் விஷயங்களை மறந்துவிடுகிறார்களே என்று கோபிப்பாள். "போகட்டும் ராதா! புலவர் கைலாயமோ வைகுந்தமோ போகட்டும், நீதான் சொல்லு, ஏன் பெண்களின் வாழ்வு இப்படி வளர்பிறை தேய்பிறையாக இருக்கிறது?" என்று நான் கேட்டேன். "அம்மா! நிலவுபோல இருக்கிறது நமது வாழ்வு என்றேனே அதிலேயே சகல விளக்கமும் இருக்கிறதே, நிலவு தன்னாலே பிரகாசிப்பதில்லையே! சூரியனிடம் வெளிச்சத்தைக் கடன் வாங்கித்தானே பிரகாசிக்கிறது; கடன்பட்டுவாழ்பவர்கள் வளர்வதும் தேய்வதுமாகத்தானே இருக்க முடியும்? இரவலி வெளிச்சம், எப்போதும் ஒரேவிதமாக இருக்க முடியாதே. பெண்களின் வாழ்வு, ஆடவரால்தானே அமைக்கப்படுகிறது—மாற்றப்படுகிறது; அவர்களாகத் தங்கள் வாழ்வை அமைத்துக்கொள்ளும் சௌகரியம், சக்தி, உரிமை இருந்தாலல்லவா, ஏன் தேயவேண்டும், ஏன் குன்றவேண்டும், குறைய வேண்டும், என்றும் ஒரே அளவு களிப்புடன் இருக்கும்படி நமது வாழ்க்கையை அமைத்துக் கொள்வோமே என்ற எண்ணம் ஏற்படும், எண்ணம் பூவிக்கவும் வழி பிறக்கும். நிலவுக்கென்று தனி ஒளி இல்லை, அதுபோலவே நமக்கென்று தனி வாழ்வு இல்லை அண்ணன், அப்பா, புருஷன், மகன், பேரன் என்று இப்படித்தானே இரவல் வெளிச்சத்தில் வாழவேண்டி இருக்கிறது. ஆடவரிடமிருந்து நாம் வாழ்வுக்கு ஒளி தேடுகிறோம். எனவே அவர்கள் இஷ்டப்பட்டு எச்சமயத்தில் எந்தெந்த அளவு வெளிச்சம் தருகிறார்களோ அந்த அளவுக்குத்தான் நாம் பிரகாசிக்க முடிகிறது. நமது எதிர்வீட்டுக்காரர், மேயர் ஆனாரல்லவா? அதுவரையில், அவர் தமது மனைவியை, வீட்டுக்குள்ளேயேதான் வைத்திருந்தார். மேயரான பிறகு, அவர் விருந்து, வைபவம் எதற்காவது போனால், மனைவியுடன் வரவேண்டும், அதுதான் முறை, நாகரிகம் என்று தெரிந்தது. உடனே அவர் தன் மனைவிக்குக் கொஞ்சம் அதிகமாக 'வெளிச்சம்' தந்தார்—அம்மா இப்போது, பள்ளிக்கூட ஆண்டு விழாவுக்குத் தலைமை வகிக்கிறார்கள்—பிள்ளைகளுக்குப் பரிசளிக்கிறார்கள்—எங்கோ ஓர் கல் நாட்டு விழாக்கூடச் செய்தார்கள். இந்த 'வெளிச்சம்' சொந்தமல்லவே! அவர் கொடுத்த "இரவல்". இரவல் எவ்வளவு காலத்துக்குப் பயன்படும்? உரியவர் கேட்டுப் பெற்றுக்கொள்ளக் கூடுமல்லவா? எங்கள்பள்ளிக்கூடத்திலே ஒரு வேடிக்கை நடந்ததம்மா போன வாரம், மீனா, ஒரு "ப்ரோச்" போட்டுக்கொண்டு வந்தாள். வாத்தியாரம்மா, அதிகக் கஷ்டமான ஒரு கணக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள், கொஞ்சம் கோபத்துடன்; ஏனெனில் கணக்கு மிகச் சுலபம் என்று கூறி, எங்களை எல்லாம் திட்டிவிட்டு, அவர்கள் அதைப் போட்டுக் காட்ட ஆரம்பித்தார்கள். மூன்று தடவை கணக்குத் தவறாகவே முடிந்தது. நாலாவது முறை கோபத்துடன் அந்தக் கணக்கைப் போட்டுக்கொண்டிருந்தவர்கள் திடீரென்று, மீனாவைப் பார்த்துவிட்டு, கணக்கையும் நிறுத்திக் கொண்டு, அவளை அருகே அழைத்து, 'ப்ரோச்'சை ஆசையுடன் பார்த்து, "ரொம்ப அழகாக இருக்கு மீனு! எந்தக்கடையிலே வாங்கினது? 'A 1'" என்று புகழ்ந்தார்கள் மீனு பெருமையடைந்தாள். இதைப் பார்த்துக் கொண்டே இருந்தாள் கமலா, மறுநாளே 'ப்ரோச்' கமலாவுக்குப் போய்ச் சேர்ந்தது, மீனுவின் முகம் வாடிவிட்டது, கமலாவின் தங்கை காந்தா மீனுவுக்கு இரவல் கொடுத்தது அந்த 'ப்ரோச்'. இரவல்பொருள் எவ்வளவு அழகாக இருந்தால்என்ன? அதுபோல் இருக்கிறது பெண்ணின் வாழ்வு. நிலவுக்கு ஒளிதரும் சூரியன், இயற்கை நியதியின்படி, அளவும் காலமுமறிந்து ஒளி தருகிறான்—பெண்ணுக்கு வாழ்வு அமைக்கும் ஆடவனோ எந்த நீதிக்கும்கட்டுப்பட்டவனல்ல—அவன் இஷ்டம்! இது மாறவேண்டுமானால், பெண்களுக்குத் தங்கள் வாழ்வைத் தாங்களே அமைத்துகொள்ளக்கூடிய திறமை, சக்தி, உரிமை ஏற்படவேண்டும். அல்பத்திலே ஏற்படக் கூடியதா?" என்று ராதா சொன்னாள். அவள் சொன்னது அவ்வளவும் உண்மைதானே. உன் அப்பா எனக்கு மகிழ்ச்சிடம் பிறக்கச் செய்தார், அவரே அதனை மங்கவும் செய்தார். பௌர்ணமி அமாவாசையாண்டும் ஏற்பட்டுவிட்டது என் வாழ்வில். தங்கம் மட்டும் எப்படித் தப்புவாள்? ராதா சொன்னதுபோல் அவளும் நிலவுதானே! சொந்தத்தில் வாழ்வு ஏது? இரவல் பிழைப்புத்தானே! அதற்குச் சிந்தாமணியால் சீரழிவு வருமோ என்று எண்ணி அவள் சோகித்ததிலே ஆச்சரியமில்லை உண்மையிலேயே தங்கம் திகைத்துத்தான் போனாள். தேம்பி அழவில்லை என் எதிரில். ஆனால் சென்றுவிட்ட பிறகு நிச்சயம் அழுதுதான் இருப்பாள்.

தங்கத்திடம் நான் கொண்டிருந்த கோபம்கூடக் கொஞ்சம் குறைந்தது, பாவம்! அவள்மட்டும் என்ன சுகப்பட்டாள்? எப்படி சுகம் கிடைக்கும்? என்று எண்ணிப் பரிதாபப்பட்டேன். அதுகூட வேடிக்கையல்ல தம்பி! சிந்தாமணிமீது இருந்த சீற்றம்கூட எனக்குக் குறையலாயிற்று. நானே எண்ணிப்பார்த்தேன். நாம் அவளைத் திட்டுகிறோம், சபிக்கிறோம், வாழ்வைக் குலைக்கவந்தாளே சண்டாளி என்கிறோம். எல்லாம் சரி. ஆனால் பாவம், அவள்மீது மட்டுமா குற்றம்? அவர் அவளிடம் என்னென்ன பசப்பினாரோ, என்னென்ன ஆசைவார்த்தைகள் சொன்னாரோ, யார்கண்டார்கள். அவளை எப்படி எப்படியோ சொல்லி நம்பவைத்ததாலேதானே, அவள் இரண்டு மனைவிமார் இருந்தாலும் பரவாயில்லை; நாம் அவருடைய அன்பைப்பெறலாம் என்று எண்ண முடிந்தது. ஆண்கள், இந்த வித்தையிலே தேர்ச்சி பெற்றவர்களாயிற்றே 'உனக்கு ஒருகுறையும் வராது!" என்று பசப்ப அவர்களிடம் கிளம்பாத நேரம் ஏது! உன் அப்பாவாவது பணத்தாசை பிடித்தவர், பரமசாதுபோல, நிர்மலஸ்தர் போல வெளிவேஷம் போட்டுக்கொண்டு ஊரை ஏய்த்தவர், அவருடைய சொல்லைக்கூடத் தள்ளிவிடு. ராதாதான் சொன்னாள், தசரதசக்ரவர்த்தி எவ்வளவு பெரியவர், கடவுளுக்கே தகப்பனார் ஆகக்கூடியயோக்யதை அவருக்கு இருந்ததாகத்தானே கதை எழுதினார்கள். அப்படிப்பட்டவர் பெண்கள் விஷயத்திலே எப்படி நடந்துகொண்டார். கௌசலை, சுமத்திரை ஆகியவர்களிடம் கொஞ்சி விளையாடிக்கொண்டிருந்தவர், கைகேயி வேண்டும் என்று கிளம்பினாரோ; நியாயமா? ராதா எனக்கு முழுஉண்மையையும் சொன்னாள், ஏதோ ஒரு ஆராய்ச்சிப் புத்தகம் படித்துவிட்டு. கிழவராம் தசரதர். ஏற்கனவே இரண்டு மனைவிகளாம். கைகேயி, நல்லபருவம், நல்ல அழகு; அவளும் ஒரு ராஜகுமாரிதான். அவளைத்தனக்குக் கலியாணம் செய்துதரச்சொன்னாராம் கிழவர். கைகேயியின் தகப்பனார், தங்களுக்குத்தான் இரண்டுதேவிமார்கள் இருக்கிறார்களே. மூத்த மனைவிதானே பட்டமகிஷி அவளுக்குப் பிறக்கும் மகனுக்குத்தானே பட்டம். என்மகளை உமக்குக் கொடுத்தால், அவளுக்குப்பிறக்கும் பிள்ளைக்கு என்னநிலை இருக்கமுடியும்? வேண்டாம் இந்தக் கலியாணம். கைகேயியை பட்டமகிஷியாக்கிக் கொள்ளக்கூடிய, மணமாகாத மன்னருக்குத்தருவேன். அவளுடைய மைந்தன் மகுடம்பூண்டு அரசனாகவேண்டும் என்பது என் ஆசை என்றானாம். இந்தக் கிழராஜாவுக்கு இருந்த ஆசையிலே, என்ன சொன்னான், கைகேயிக்

(7-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

காஞ்சி] 26—1—47 [ஞாயிறு

## அங்கே அவர்கள்!

★

"சொக்கப்பா! போன இடத்திலே என்ன விசேஷம் சொல்லப்பா." என்று கேட்டான், வாரச் சந்தைக்குப் போகாத கந்தப்பன்.

"கந்தப்பா! நீ வராமல் போனாயே தூர் அதிர்ஷ்டம் உனக்கு. சந்தைக் கடையிலே இன்று நல்ல சான்சப்பா. எல்லப்பன் எருது இருநூற்றுப்பத்துக்குப் போச்சுது. சின்னப்பன் செவிலி மாட்டை சாமர்த்தியமாக தொண்ணூறுக்கு ஒருவன் தலையிலேகட்டிவிட்டு, அருமையான காளையை அறுபதுக்குமுடித்துக் கொண்டான். அழகப்பன்கடை வைத்தான்; நல்ல இலாபம். அமிர்தம் எழுகூடை மாம்பழத்தை ஒரு மணி நேரத்திலே விற்றுவிட்டாள்........" என்று சந்தையில் நடைபெற்றதை விவரிக்கலானான்.

"அது கிடக்குதப்பா! உன் விஷயம் என்ன ஆச்சு சொல்லப்பா" என்று கேட்டான் கந்தப்பன்.

"நம்மக் கதையைக் கேட்கிறாயா? நம்ப சரக்கு அங்கு யாருக்கும் பிடிக்கவில்லை. விலை கேட்டுப் பார்த்து விட்டுப்போகவும் ஆளில்லை. சந்தைக் கடையிலே, நடக்கிற வேடிக்கைகளைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவரவர்களுக்கு 'இலாபம்' கிடைத்தது, நம்மக் கடைப் பக்கம் ஒருவரும் எட்டிக்கூடப் பார்க்கவில்லையப்பா. கந்தப்பா! வெளியே சொல்லாதே, வெட்கக்கேடாக இருக்கும். மடியிலே இருந்த பண முட்டையும் தொலைந்து போச்சு; சந்தைக்குப் போய் நான் கண்டது இதுதானப்பா" என்றான் சொக்கப்பன்.

"அட இழவே! இதற்கு நீ சந்தைக்குப் போவானேன்?" என்று கேட்டான் கந்தப்பன்.

"சந்தையிலே நம்ம சரக்கைச் 'சீந்துவார்' இல்லையானாலும், அங்கு 'வியாபாரத்துக்காகப் போய் வந்தான் என்கிற ஒரு கௌரவம், நம்மக் கடைவீதியிலே இருக்குமல்லவா? மேலும் சந்தையிலே, பொழுதுபோக்காகத்தான் இருந்தது" என்றான் சொக்கப்பன்.

* * *

சந்தைக் கடை விஷயம் சத்தற்றது தள்ளிவிடுவோம். மிக முக்கியமானதும், ஒரு நாட்டின் வரலாற்றிலே, அடிக்கடி நேரிட முடியாததுமான, அரசியல் நிர்ணய சபை விஷயத்தைக் கவனிப்போம்.

கந்தப்பன் போகவில்லை சந்தைக்கு. திராவிடர் கழகமும் அ. நி. சபைக்குப் போகவில்லை. அவ்வளவு பெரிய சபைக்கு, இந்தச் சாமான்யக் கழகத்தாருக்கு அழைப்பு கிடைக்குமா! இதிலே சர்தார்கள், தேசோத்தாரகர்கள், ஸ்ரீஜக்கள் இத்யாதிகள், இல்லையே! திராவிடர் கழகம் அழைக்கப்படவில்லை. சரி. சபைக்கு வேறு சில பலர் சென்றார்களே, "சென்னை மாகாணத்தின்" சார்பாக, காங்கிரசாரும் காங்கிரசாரால் ஆதரிக்கப்பட்ட வேறு சில சாராரும்—இவர்களைப் பற்றிய செய்தி என்ன? சந்தைக்குப் போய்வந்த சொக்கப்பா செய்திதான்!! வேறு விதமாக இல்லை.

ஜவாஹர் பேசினார்—படேல் பேசினார்—பிரசாத பேசினார்—பெரிய கூட்டம்—ரொம்பக் குளிர்—இப்படித்தான் செய்திகளைச் சந்தைக்குப் போய்வந்த சொக்கப்பா போலக் கூறுகிறார்களே ஒழிய, இவர்கள் அங்கு போய் சாதித்ததுஎன்ன? சரக்கு விற்பனையாயிற்றா? என்று கேட்கப்போனால், பரிதாபம், வெட்கம், துக்கம்—பிறக்கிறது. நாம் திராவிடர் கழகம்; எனவே காங்கிரஸ்மீது குறை கூறும் போக்கிலே எழுதினோம் என்று கூறுவர். நாம் பேசவில்லை. காங்கிரஸ் அன்பரையே பேசக் கேட்டுக் கொள்கிறோம்.

'தமிழ் முரசு' காங்கிரஸ் ஏடு, அதிலே 'நாட்டு நடப்பு' எனும் தலைப்பிலே, 'ஒற்றன்' என்ற புனை பெயருடன் (திராவிட நாடு இதழில் ஊரார் உரையாடல் பகுதி, 'ஒற்றன்' என்ற புனை பெயருடையோரால் தீட்டப்படுவது நண்பர்களுக்குத் தெரியும், அந்த ஒற்றன் வேறு) ஒரு அன்பர் தீட்டுகிறார்; சொக்கப்பா சந்தைக்குப் போய்வந்த கதைக்கும் அதற்கும் அதிக வித்யாசம் இருக்கிறதா பாருங்கள்.

"தென்னாட்டு அங்கத்தினருக்குள் சரியான கட்டுப்பாடு இல்லை. மற்ற எல்லா மாகாணத்தவரும் தங்களுக்குள் ஒரு தலைவரை ஏற்படுத்திக்கொண்டு அவர் சொற்படி தங்கள் தங்கள் மாகாணங்களின் அபிப்பிராயத்தைக் கட்டுப்பாடாகத் தெரிவிக்கின்றனர். சென்னை மாகாணத்தவர் அப்படி இல்லை.

எடுப்பார் கைப்பிள்ளைகளாக இருக்கின்றனர். சபையின் நடவடிக்கைகளே இவர்களுக்குப் புரிவதில்லை. இந்துஸ்தானி அடியோடு தெரியாது. ஆங்கிலத்தில் பேசுவதற்கோ வெட்கம். தாய் மொழியில் பேசுவதற்கும் தைரியமில்லை. இந்த நிலையில் இவர்களை ஏனென்று கேட்க ஆளில்லை.

எப்படியோ தமிழ் நாட்டுப் பிரதிநிதிகளும் அ. நி. சபைக்குப் போனார்கள் வந்தார்கள்; மீண்டும் போகவும் போகிறார்கள். 'என் செயலாவது யாதொன்றுமில்லை" என்பதை அவர்கள் ஒவ்வொருவரும் உணர்ந்தே இருக்கிறார்கள்."

எப்படி இருக்கிறது இலட்சணம்? சொக்கப்பனே மேல் என்கிறீர்கள்! ஆம்!

எடுப்பார் கைப்பிள்ளை
பேச முடியவில்லை
நடப்பது புரியவில்லை
கேட்க ஆளில்லை.

எவ்வளவு அருமை! எத்துணை கியாதி!! எத்தகைய சிறப்புரைகள்! இந்தப் 'பூணூரம் பூண்ட' புருஷோத்தமர்கள் போயிருக்கும் இடத்துக்கு நாம் போகாததிலே தவறும் இல்லை—நஷ்டமும் இல்லை!!

சர். கோபாலசாமி ஐயங்கார் என்னமோ பேசினாரே சபையில் என்று கேட்கத் தோன்றும். அன்பர் அதற்கும் பதில் அளித்து விட்டிருக்கிறார்.

"அரசியல் ஞானத்தில்—ஆங்கிலப் புலமையில்—தென்இந்தியரிடம்—அதிலும் தமிழ்நாட்டவரிடம்—யார் போட்டியிட முடியும் என்று இறுமாந்திருந்தோம் முடிவில் ஏமாந்தோம்.

சர். என். கோபாலசாமிஐயங்கார் நம் கடைசீ நோக்தில் தமதுதகுதியின்மையை ஒப்புக்கொண்டு ஆசையை அவமானச் சிமிழில் வைத்து அடைத்து விட்டாராம்"

ஆசையை அவமானச் சிமிழில் அடைத்து விட்டார் இங்கே!

ஐக்கிய நாடுகள் சபையிலே ராமசாமி முதலியார், உலகக் கீர்த்தியைப் பெற்றார் அமெரிக்காவில்-சான்பிரான்சிஸ்கோவில். (தினசரி ஆசிரியரின் பாராட்டுதலையும் பெற்றார்!!

அவருக்கு அ. நி. சபையிலே இடமளிக்க மனமில்லை காங்கிரசாருக்கு; அல்லாடியாருக்கு அன்புடன் அளித்தனர்! எத்தகைய அல்லாடி?

1943-ல் பெடரல் கோர்ட்டின் உத்தரவுக்கு மேலும் அவசரச்சட்டம் பிறப்பிக்க வைசிராய்க்கு அதிகாரம்உண்டென்று வைசிராய் சார்பிலே வாதாடிய வக்கீல்!

இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் 26-வது பிரிவுக்கு உயிரளித்த அல்லாடி.

அந்தப்பிரிவின்கீழ்காவற்கைதிகளாகச் சிறையில் வாடிவதங்கிய தேசபக்தர்களின் வயிற்றெரிச்சலைத் தேடிக்கொண்ட அல்லாடி! அவருக்கு அன்பு காட்டினர் இங்கு. கூன்டோடு அங்கு 'ஆசையை அவமானச் சிமிழில்' அடைத்து விட்டார்களாம்! பரிதாபம்! 'சொக்கப்பா! நான் சந்தைக்கு வராததிலே தப்பு என்னப்பா? நீ போய்க் கண்டது ஒன்றும் காணோமேப்பா?" என்று கந்தப்பன கேட்பான். நாம்கேட்கவில்லை! ஏனெனில் அவர்கள் அங்கு போனதால் ஓர் அரிய உண்மையைத்தெரிந்துகொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம்.

தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவரொருவர் "கட்டாயத் தொகுதி முறையை ஏற்பதென்று காங்கிரஸ் முடிவு செய்து விட்டால், 'ஏ' தொகுதியை இன்னொருதுண்டு போட்டு, 'டி' (D) தொகுதி என்று சிருஷ்டித்தாலொழிய தென் இந்தியா உயிர் வாழ முடியாது" என்று சொன்னாராம்.

அங்கே அவர்கள் சென்று கண்டறிந்தனர் உண்மையை. மகிழ்கிறோம்! நமது பணி இந்த D தொகுதி ஏற்பட வேண்டும் என்பதற்குத்தான் — திராவிட நாடு திராவிடருக்கே என்பதற்குத்தான்.

இந்தப் போது உண்மையை அறிந்து கொண்ட அன்பர், எப்படிப்பெறுவது இந்த D தொகுதியை என்பது பற்றியும் யோசனை கூறினாராம்.

"நமது தென் இந்தியாவில் நடக்கும் ஆரியர் — திராவிடர் என்ற அர்த்தமற்ற சண்டையை நிறுத்திவிட்டு, இங்குள்ள கட்சிகளும் இனங்களும் ஒன்று பட்டால் தென் இந்திய சமஷ்டி ஒன்றை அமைக்க இது பொன்னான நேரம்" என்றாராம்.

பொன்னான நேரம்—சந்தேகமில்லை. ஆனால்.. ஆரியதிராவிடச் சண்டை அர்த்தமற்றது என்று கூறி, பொன்னின்'மதிப்பு'குறையும்படிச் செய்கிறாரே அன்பர்!

இந்தியா இந்தியர்க்கே!பாரத வர்ஷம்! அகில இந்திய ஆரியல்!! இவைகளையே அர்த்தமுள்ளவை என்று கூறி வந்தவர்கள், இப்போது தென் இந்தியசமஷ்டி என்ற அளவுக்கு வந்திருக்கிறார்கள். வருவதற்குமுன், தென் இந்தியர், வடஇந்தியர் என்றுபிரித்துப் பேசுவது அர்த்தமற்ற சண்டை என்றுதான் சொன்னார்கள். இப்போது ஆரியதிராவிடச்சண்டை அர்த்தமற்றது என்கிறார்கள். இந்த விஷயத்திலேயும் உண்மையின் பக்கத்தில் அவர்கள் வந்து சேர்ந்தே தீருவார்கள் என்ற உறுதி நமக்கு இருக்கிறது.

அங்கே அவர்கள் சென்றதால், D தொகுதிதேவை என்கின்றனர். அது ஏற்பட்டால் தான்தென்இந்தியர்உயிர்வாழமுடியும்என்று காரசாரத்தோடுகூற வேண்டிய அளவு, மனவேதனை ஏற்பட்டிருக்கிறது. அந்த வேதனை வளரட்டும்! கனகவிசயர்கள்! கங்கைக்கரையினரே! கொஞ்சம் கேலியும் இழிமொழியும் அதிகமாகக் கூறுங்கள் ஒவ்வொருதமிழ் மகன் உள்ளத்திலும் இன்று உறங்கிக் கொண்டுள்ள சேரன் செங்குட்டுவன் விழிப்புறட்டும் — வீறுகொண்டெழட்டும்.

★

> லெனின் கற்பித்ததுபோல
> ஒரு புதியவாழ்வை, புதிய
> இருக்கையை, புதியகலையை
> அமைப்போம்.
>
> —ஸ்டாலின்

# ஏர் முனை

— 2 —

பரம்பரை பரம்பரையாக, ஏதேதோ காரணத்தால், சிலருக்கு ஜெமீன் உரிமை தரப்பட்டது. அவர்கள் கூறுவர், நான் அந்த நவாபுக்கு உதவி செய்தேன், இன்ன ராஜாவுக்கு நான் படை தந்தேன், என்று பல காரணங்களை. வேடிக்கைக்காகவும் பொழுதுபோக்கவும் பேசும் போது வேறு காரணங்களை ஊரார் கூறுவர். "அந்த ராஜா, ஒருநாள் பாதித் தூக்கத்திலே இருக்கிறான். கொஞ்சம் மயக்கமாய் இருந்ததாம். போதை. கட்டிலிலே புரண்டபடி கண்ணு! கண்ணு என்று குளறினான். உடனே, கண்ணன், (அவன் தானே அங்கு காவற்காரனாக இருக்கிறான்) ஐயா தோ கூப்பிடுகிறாரே என்று வேகமாக உள்ளே சென்றிருக்கிறான், போதையிலே இருந்த அந்த ராஜா அப்படியே அவனைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு, கண்ணு' கண்ணு! என்று கொஞ்சி முத்தமிட்டு, கர்மம் கன்னத்தைக் கூடக் கடிதது விட்டாராம். கண்ணன் பாவம், இந்தத் தொல்லையைப் பொறுத்துக் கொண்டிருந்துவிட்டு, பிறகு விளக்கி. 'மகாராஜா! நான், கண்ணன்! காவல்காரன்!", என்று பயத்துடன் பேச, ராஜா சிரித்துவிட்டு. 'அடடே இழவே! நான் கண்ணுமணி என்று அல்லவா எண்ணினேன். தொலையுது வெளியே இதைச்சொல்லாதே" என்று கேட்டுக்கொண்டு, கண்ணனுடைய பொறுமைக்கு மெச்சி அவனுக்கு போந்தயூர் ஜெமீனைக் கொடுத்தாராம். அந்தக்காவக்காரக் கண்ணனுடைய பேரன், இந்த நாவ்பகனா ரங்கதுரை, தெரியுமா, இந்த ஜெமீன் கிடைச்சவிதம்" என்று கூறுவர் சொல்வார்.

"காலமுக்கி ஜெமீன் தெரியுமாப்பா உனக்கு" என்று இன்னொருவன் கேட்பான். அதென்னடா சர்மம்? என்றுகேட்பான் வேறொருவன். "அதவா! கேள்டா, கர்நாடகராஜாவுக்குக் கால் அமுக்கிற உத்யோகம் ஒருவனுக்கு ஒருநாள், ராஜாவுக்கு ரொம்பச் சுகமாகக் கால் அமுக்கினானாம். அந்தச் சந்தோஷத்தாலே ராஜா, டே! உனக்கு என்னடா வேணும்? கேள்டா! என்றானாம். அந்தப் பய, இளித்துக்கொண்டே இருந்தான், புது வேட்டி கேட்கலாமா, கொஞ்சம் பொன் கேக்கலாமான்னு. ராஜாவே "டே! வடக்கே இருக்கே குட்க்குமலை அதிலே இருந்து அதுக்கு பத்தாவது மைலிலே இருக்குபாரு பனந்தோப்பு, அதுவரையிலேஉனக்கு ஜெமீனாகக் கொடுத்துட்டேன், போடா"ன்னு சொல்லி விட்டாராம். அதற்குத்தான் காலமுக்கி ஜெமீனுன்னு பேரு, என்றுபேசுவான்.

இன்னம், வேடிக்கையாக, சிலது விபரீதமாக, சிலது ஆபாசமாகக்கூட இருக்கும் இந்த ஜெமீன், மானியம், மிராசு, பாத்யதை, என்ற பல பெயரால், கிடைத்துள்ள நிலங்களின் கதைகளை விசாரிக்கப் போனால்.

பொதுஉண்மை என்னவென்றால், அரசன், தன்னைச் சுற்றி அதிகார தேவதைகளை அமைத்துக் கொள்வது, தன் அரசபீடத்துக்கு ஆட்டம் வராமலிருக்கவே இந்த ஏற்பாட்டைச் செய்து கொண்டான் என்பதுதான்.

பூபதி, பிரபு, புரோகிதன், இந்த முக்கூட்டு, முதலாளித்வ அச்சிலே நெடுங்காலமாக இருந்து வருகிறது.

பிரிட்டிஷார் ஆளவந்ததும், தங்களுக்கு "ஆமாம் சாமிகள்" வேண்டுமென்பதற்காக, இந்தப் பிரபுக்களை உண்டாக்கிக் கொண்டனர். தொப்பி போட்ட துரையைச் சுற்றி ஜரிகைக் குல்லாய் அணிந்த ஜெமீன்தாரன்; "இருவரும் நீடூழிகாலம் வாழணும்னு பரந்தாமனைத் தோத்தரிக்கிறேன்" என்று கூறி, ஜெபமாலையும் கையுமாக நிற்கும் புரோகிதன்; முதுகெலும்பு முறியப் பாடுபட்டு, இந்த மூன்று ரகத்துக்கும் சுக வாழ்வு அளிக்க, விவசாயி! இதுவே முதலாளித்வ முறை. இந்த முறைக்குத்தான் இன்று முறிவு ஏற்படவேண்டும் என்கிறோம். ஒன்றை விட்டு விட்டு, மற்றதை முறிப்போம் என்றால் முடியாது. சுயநலம், சுயசுகம் என்ற பசைபோட்டு இந்த மூன்று வளைவுகளும் ஒட்டப்பட்டிருக்கின்றன. சம்மட்டி அடி, சரி சமமான பலத்துடன் வேகத்துடனும் மூன்றின் மீதும் விழவேண்டும். விழும்!

* * *

பயிரிடும் பாட்டாளியின் வாழ்க்கையைச் சுமையாக்கி விடுவது, பண்ணை முதலாளிகளுக்கு ஆரம்பத்திலே பெரிய இலாபமாகத் தோன்றுகிறது. அவனை அடக்கி, ஆள்வதிலே ஓர் வகை ஆனந்தம் பிறக்கிறது. ஆனால் நீண்ட கால நோக்குடன் கவனித்தால், அவர்கள் தங்களுக்கும் தமது ஆதிக்கத்துக்கும் குழி தோண்டிக் கொள்வதோடன்றி, விவசாயத் தொழிலுக்கும், அதன் பயனாக நாட்டுச் செல்வ வளர்ச்சிக்கும், ஊறு தேடுவதைத் தெரிந்துகொள்ளலாம். காலமெலாம் பாடுபடுபவனை அரைப் பட்டினியாகவே வைத்திருப்பதால், அடிமையாக நடத்துவதால், அவன்விவசாயத்திலே அக்கறையற்று, பிறகு திறத்தையும் இழந்து போவதுடன், சமயம் கிடைத்ததும், இந்தச்செக்கு மாட்டு வேலையை விட எங்காவது கல் உடைக்க வேனும் போகலாம் என்று நகரத்துக்குச் சென்றுவிடுகிறான்.

விவசாயத்துக்குப் போதுமான, தரமான ஆள்வசதியும் குறைந்து விடுகிறது, அதற்கு ஏற்றவண்ணம், மாசூல் மட்டமாகி விடுகிறது, பிறகு விவசாயம் கட்டி வருவதில்லை என்ற பேச்சு எழுகிறது. சலிப்பும், சோகமும் நிரம்பிய விவசாயி ஒரு புறமும், அதிகாரமும் ஆணவமும் கொண்ட சுகபோகி மற்றோர் புறமும் இருந்துகொண்டு, விவசாயத்தை எப்படி வளமுள்ளதாக்க முடியும்?

தேவையான அளவு, தன்னால் நேரடியாகக் கவனித்துப் பராமரிக்கக்கூடிய அளவு, (ஆசைக்கேற்ற அளவல்ல, அதுதான் அண்டை வயலின்மீது சென்றபடி இருக்குமே, அகிலத்தின் கடைசீ ஏகர் போகும்வரை) தம்மால் நிர்வகிக்கக்கூடிய அளவு, தமது குடும்பத்தின் தேவைக்குத் தக்கஅளவு நிலம் இருக்கவேண்டும் என்ற எண்ணம், இன்றுள்ள பண்ணை முதலாளிமார்களுக்கு ஏற்படவேண்டும். ஏற்படுமா? ஏற்படாது! மனித சுபாவம் அது. பண்ணையாருக்கும், நிலத்துக்குப் பக்கம் வேறோர் நிலம் தேடும் எண்ணம்தான் உண்டாகும்; விவசாயத்தொழிலாளிக்கு அவன் நிலைக்கு ஏற்றபடி, தன் மாட்டின் கழுத்துக்கு இரண்டு மணி கிடைத்தானதும், மூன்றாவது மணியும் கிடைக்காதா என்ற எண்ணந்தான் உண்டாகும். நாம் இவர்களில் யாரையும் புத்தராக்க முடியாது! ஆனால் புதியதோர் திட்டம், சட்ட மூலம் செய்யலாம்—செய்து இருக்கிறார்கள் வேறுநாடுகளில். —இங்கும் இப்போது ஜெமீன் ஒழிப்பு எனும் திட்டம், புதுத் திட்டத்துக்கான ஆரம்ப வேலை என்றே நம்புகிறோம்.

பயிரிடுபவனைப் பாடுபடுத்தாதே!

நியாயமான, வாரம் கொடு.

நிலத்தை, முதலாளித்வமாக்காதே!

ஜெமீன், மிட்டா, மிராசு, பண்ணை பாத்யதை ஆகியவைகளைக் கலைத்துவிடு.

* * *

நிலமற்ற கூலி விவசாயியினால் நாட்டின் செல்வநிலை உயராது. உரிமை கொண்டாடி, உழைக்க முன்வராத பண்ணை முதலாளியினாலும் நாட்டின் செல்வநிலை உயராது. இப்படி இரு சாரார் இருக்குமட்டும், செல்வநிலை உயராது, விவசாயம் செழிக்காது என்பது மட்டுமல்ல, கிராமப் புறம் வளமாக இராது, அங்கு வறுமை ஒழியாது, தற்குறித்தனம் நீங்காது.

தஞ்சை மாவட்டத்திலே, சாம்பசிவ ஐயர்—சாமியப்ப முதலியார்—ஆரியர் – திராவிடர் என்று, நாம் நினைக்கிறோம். ஒருவரைக் காங்கிரஸ் என்றும், மற்றவரை ஜஸ்டிஸ் என்றும் சொல்கிறோம்—அவரவர்களுக்குவேறு வேறு கொடி இருப்பதாக நாம் எண்ணுகிறோம்–பெருமையுடன் பேசிக்கொள்கிறோம். குத்தகைத் தகராறு—வாரத் தகராறு—இவைகளின் காரணமாக, விவசாயிகளின் கிளர்ச்சி நடக்கும் போது, என்ன காண்கிறோம், ஆரிய சாம்பசிவ ஐயரும் திராவிடச் சாமியப்பாவும், காங்கிரஸ் மந்திரி பாஷ்யம ஐயங்காருடன் பேசி, திராவிடக் கந்தசாமியின் கொட்டம் ஒழிக்கப்படவேண்டும் என்று மந்திராலோசனை செய்கிற வேடிக்கையை. வேடிக்கையா அது? வேதனை!

ஏன் சாமியப்பாவைக் குறித்தோம், எனில், பண்ணையிலே பாடுபடும் உழவர்கள், திராவிடர்கள், அவர்களின் வாழ்வு செம்மைப்படுத்தப்படவேண்டுமென்பதே திராவிடர் கழக நோக்கம், எனவே அந்த உழவர்விஷயமாக மற்றவர்கள் எந்த முறையைக் கையாண்டாலும், நாம், திராவிடன் என்ற உணர்ச்சியோடு நடந்து வழிகாட்டியிருக்கவேண்டும், ஏனெனில், அவர்களும் நாமும் ஒரே இனம், என்ற எண்ணம், அவருக்குத்தானே ஏற்படவேண்டும் — சாம்பசிவஐயருக்கு ஏற்படத் தேவையில்லை. ஆனால் நடந்தது என்ன? ஆரியமும் திராவிடமும் இந்தவிஷயத்திலே ஒன்றாகி நின்றது — பண்ணையார் என்ற உருவில். நண்பர் சாமியப்பா, நல்ல மனமுடையவர் — முற்போக்கான கொள்கையை அறிந்தவர்— அவரே இந்தப்பிரச்னையில் இதுபோல்நடந்து கொள்ளவேண்டி இருந்தது என்றால், குற்றம் தனிப்பட்டவர்களின் குணத்தைப்பொறுத்து இல்லை, அவர்களின் நிலையைப் பொறுத்து இருக்கிறது என்பது விளங்குகிறதல்லவா? ஆகவேதான், நம்மைப் புரிந்துகொள்ளக்கூடிய நண்பரின் பெயரை எடுத்துக்காட்டுக்குக்கூறினோம். பெயரைக் கேட்டாலே, நடுக்குக்கச்சக்கும், வேறு பண்ணை முதலாளிகள் உள்ளனர், நூற்றுக்கணக்கிலே. அவர்களுக்கு நாம் கூறுவது புரியாது, எனவே அவர்களைக் குறித்து எழுதவில்லை.

* * *

உழவனின் உழைப்பின் வெற்றியைக்காட்டுவது பொங்கல் விழா! அறுவடை விழா. ஆம்! புத்தாடையும் புத்துணவும் புன்னகைபூத்த முகத்தழகும், ஓர் நாள் விழாவுக்குப் போதுமானவையாக இருக்கலாம். வாழ்வு விழாவாக வேண்டும். அங்ஙனமாதலே முறை. அதற்கே, அரசியல் அமைப்புகள், அவற்றினைக் கட்டிக்காக்க எடுத்துக்கொள்ளப்படும் முயற்சிகள், அவைகளின் பாதுகாப்புக்காக ஏற்படும் போர் முகாம்கள், போன்ற பலவும்!" அலைகிறான், அலைகிறான் ஓயாது! தேடுகிறான் திக்கெல்லாம்! எதிர்ப்பட்டோரை எல்லோரும், கேட்டுப் பார்க்கிறான். இதிலா, அதிலா, எதில் கிடைக்கும், கருகாத களிப்பு என்று ஆராய்கிறான், அறிவுடைமனிதன். சித்தாந்தத்திலே, வேதாந்தத்திலே, மோனத்

திலே, பாமரன்பற்றிய ஞானத்திலே, கலையிலே, எதிலெல்லாம் கிடைக்கும் 'வாழ்வின் சுவை' என்று தேடியவண்ணம் இருக்கிறான், தெளிவுள்ள மனிதன்; அலுத்தறவன் ஆமையாகிறான்! வானவெளியிலே அலையும் பறவை தன் வாழ்வுக்கான இடத்தை அடைய கனலை, காற்றை, கடுங் குளிரை, கண்ணிகளை எல்லாம் பொருட்படுத்தாமல், பரப்புகள் பலவற்றைப்பார்த்து, அலுத்தாலும் மீண்டும் தேடிடும் பணியைத்தொடர்ந்து நடத்தி, தன் இலட்சியபூமியைச் 'சென்று அடையும் வீரன்போல, அருகே ஓர் நீர் நிலையம் நறுமணச் சோலை, அதனருகே விளை நிலம், இடையே பஸ்கவரிடமிருந்து தப்பிடும் பக்குவமமைந்த இடம் இவ்வளவுமமைந்து, அங்கு தங்குதல்போல், அறிவுள்ள மனிதன், தன் வாழ்க்கைக்குஓர் "இடம்" தேடுகிறான்! ஆர்! அவன் வாழ்விருப்புகிறான், வறியோனுகவதைய மறுக்கிறான், வஞ்சகனுக வாழ்வது தன்மானத்தை அழிக்கும் எனவே அதனை வெறுக்கிறான், உள்ளது போதும் என்றுரைக்க மறுக்கிறது உள்ளம், கண் எதிரே வளமுள்ள வாழ்வு நடாத்துபவர் தெரிவதால்! எனவே, வாழ்வுக்கான போர் நடத்துகிறான்— அவன் விரும்புவது வாழ்வு— தனக்கும் மற்றவர்க்கும் —புது வாழ்வு. அந்த வாழ்வு, உழவனுக்கு வேண்டுமே; எங்கே அவன் பெற முடிகிறது? ஜெமீன்முறையும், பெரியபண்ணைகளிலேநடைபெறும் படாடோபமும் அவனைப் பாழ்படுத்துகிறது. வாழ்வு சுமையாகி அவன் ஓய்ந்து போயிருக்கிறான். வாயில்லாப் பூச்சி, பொறுமையின் இருப்பிடம், உழைப்பதில் அலுப்புத் தட்டாதவன் என்று அவனைப் பற்றிப் பேசப்படுகிறது. அவன் வாழ்க்கையிலே நான் திருப்தி இருக்கிறது. ஏனெனில் அவனுக்குள்ள தேவைகள் மிகச்சொற்பம், அவன் என்னகாலையிலேகாப்பி [illegible] அலைப்பேகிருனு, மாலையிலே மினுக்கும் நகரத்தைக் கேட்பவனு, விதவிதமான வேட்டி சட்டை போடுபவனு, வேளைக்கொரு ருசிகரமானபண்டங்கள் தேடுவானு, கலயத்திலே உள்ள கஞ்சிபோதும் என்று இருக்கிறான்; நாகரிகம் என்ற நச்சுச்சுழலிலே சிக்கவில்லை, என்று பேசப்படுகிறது. பாதி வாழ்வு அவனுடையது, அந்தப் பரிதாப உண்மையை இந்தப் பசப்பும் திரைபோட்டு மூடி வைக்கிறார்கள். பலநாட்களுக்கு இம்முறை பலிக்குமா? இன்று உழவன் உரிமை கேட்கிறான்; ஊரார் இதனை 'உற்பாதம்' என்று எண்ணுகின்றனர்; ஊராள்வோர் இந்தப்புதிய உபத்ரவத்தை முளையிலேயே கிள்ளி எறிந்தாக வேண்டும் என்று முஸ்தீபுகள் செய்கின்றனர்.

* * *

"ஜெயிலிலே தள்ளுவார்கள்!"

"ஏன், நியாயத்தைக் கேட்டால் தண்டிக்கும் ராஜாங்கமா இது?"

"நியாயமோ அநியாயமோ, பாட்டன்மார்காலமுதல்இருந்து வரும் முறையைக் குறைகூறுவதற்கு விடுவார்களா?"

"ஜெயிலிலேதான் போடுவார்களா? சரி, செய்யட்டும். ஜெயிலிலே என்னென்ன கொடுமைகள் இருக்கும். அதையும் அனுபவிப்போம். மேலும், எங்களை ஜெயிலிலே போடுவதாக மிரட்டும் இந்த 'ஐயாமார்களெல்லாம்' கூட ஜெயிலிலே இருந்தவர்கள் தானே. ஜெயில், நல்ல கல்லுக் கட்டிடம்; அங்கே ஏதம் இறைப்பு, பாத்திகட்டு, களைபறிப்பது, நீர் பாய்ச்சுவது, வரப்பு கட்டுவது வாய்க்கால் வெட்டுவது, ஆண்டை வீட்டுக்கு ஆனவேலைகளைச்செய்வது, அடிபடுவது அடிமைப்படுவது என்ற கொடுமைகள் கிடையாதல்லவா? ஜெயில் மேலான இடம். அனுப்பட்டும் தாராளமாக."

மிட்டா மிராசு, பண்ணை ஜெமீன் ஆகிய இடங்களிலே உள்ள "வாயில்லாப்பூச்சிகள்" இப்போது இவ்வண்ணம் பேசுகின்ற காட்சியைக் காண்கிறோம்.

* * *

இந்நிலையில் காங்கிரஸ் மந்திரி சபையினர், ஒருபுறம் நின்று ஜெமீன்தாரிமுறையை ஒழித்துவிடப்போகிறோம் என்று பேசுகின்றனர்; மற்றோர் புறமோ, விவசாயியின் கிளர்ச்சிகளைஒடுக்கியே தீருவோம் என்று முழக்கமிடுகின்றனர். ஏழைபங்காளர் நாமே என்றும் பேசுகின்றனர்; ஏர்முனையிலே அமைதியை நிலைநாட்ட எமது முழுபலத்தையும் உபயோகித்தே தீருவோம் என்றும் கூறுகின்றனர். காங்கிரஸ் மந்திரிசபையினர் உரிமைக்காக, நாட்டுச்சுதந்திரத்துக்காகப், பாடுபட்டவர்கள் தாம். ஆனால் அந்தக் காங்கிரசின் பலம் வளர்ந்து சர்க்காரை நடத்துமளவு செல்வாக்கு ஏற்பட்ட உடன் நிலப்பிரபுக்கள் அதனைக் கைப்பற்றிக்கொண்டனர். எனவே புதியதோர் சிக்கலைக் காங்கிரஸ் சமாளிக்க வேண்டி இருக்கிறது. காட்டு ராஜாக்களை எதிர்த்து நடத்தும் போராட்டம் இதுவரைநடத்திய போராட்டங்களைப்போன்றதல்ல.

வெள்ளையரோடு சண்டை போடுவதிலே ஒரு மதிப்பு ஏற்படுகிறது! ஆண்டை வீட்டுப் பணக்காரனும், பக்கத்துவீட்டுப் புரோகிதனும் புகழ்கிறார்கள். தடியால் அடிக்கும் போலீசார் கூட தனியாகச் சந்திக்கும்போது, 'எல்லாம் சாண்வயித்துக்கொடுமைதான்' என்றுகூறுவர். தண்டனைதரும் மாஜிஸ்ட்ரேட்கூட, 'தேசபக்தியையாரும் பழித்துப்பேசக்கூடாது. ஆனால் சட்டம் சொல்கிறபடி நடக்க வேண்டியவன் நான்' என்று கூறுவார் — மன்னிப்புக்கேட்டுக் கொள்ளும் பாவனையில். ஆனால் அதேபோது, கிராமத்தைச்சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று எண்ணி, ஒரு கோவாபரேடிவ்சங்கம், அல்லது பஞ்சாயத்துபோர்டு, அல்லது ஜாதி பஞ்சாயத்து, அதுகூட வேண்டாம், ஒருசின்னபஜனைகோயில் இதன் நிர்வாகத்திலே தலையிட்டுப்பார்த்தால் தெரியும், என்னென்ன வகையான எதிர்ப்பு, எங்கெங்கிருந்து கிளம்புகிறது என்றவிஷயம். பாராட்டிப்பேச ஆளே இராது.

கிராமத்தலைவனை எதிர்த்தால் கரகோஷம் கிடையாது. பணக்காரனின் பகைமை கிளம்பும். புரோகிதன் சபிப்பான். கந்துக் கடைக்காரனும் கள்ளுக்கடைக்காரனும் குருக்களும் ஒன்று கூடித்திட்டமிட்டு அடி ஆளை ஏவுவர். ஊர்மக்களும், தங்களுக்காகப்பாடுபட வந்தவனென்று எண்ணி மாலையிட்டு வரவேற்க மாட்டார்கள். "இவன்யாரடா, எங்கக்கிராமத்துக்கு!" என்று பேசி ஏசுவார்கள். தொன்று தொட்டுள்ள அடிமைத்தனங்களை அவர்கள் அழகிய ஆபரணங்களென்று, அறியாமையால், எண்ணிக்கொண்டுள்ளனர். எனவே கிராமத்தைச் சீர்திருத்துவது என்றால், அஞ்சாநெஞ்சமும், ஒழுக்கமும் வேண்டும். கெட்ட பெயர் ஏற்படுமே என்பதில் கவலை கொள்ளாமனப்பான்மை வேண்டும். எவ்வளவோ எடுத்துச்சொல்கிறோம், இந்தமக்கள், ஏனோ உண்மையை உணரமறுக்கிறார்கள் என்ற எண்ணம் ஏற்பட்டு, உற்சாகத்தைக் குன்ற வைக்க இடந்தரலாகாது. கிராமத்தான், ஆடுவெட்டிப்பொங்கலிட்டு, அரசனுக்குத் தவசு மரம் நாட்டி, அங்காளம்மனுக்குப்பூந்தேர் ஓட்டி, பதினெட்டாம்போர் கூத்தாடிக்கொண்டு இருப்பவன், மார்க்சைப்படித்துவிட்டு, புரட்சி வரலாற்றைத் தெரிந்துகொண்ட புத்தறிவாளனல்ல. பழமையின் பிடியிலே இருப்பதுகூட அவனுக்குத் தெரியாது. அவன் தான்இருக்கும் நிலையே மேன்மையானது, தூய்மையானது, பட்டணத்து மக்கள் கெட்டு விட்டவர்கள் என்று எண்ணிக்கிடக்கிறான். அப்படிப்பட்டவனிடம் பழகி, சீர்திருத்தம் செய்வதற்குத்தனியான பண்புகள் வேண்டும்.

பெரும்பாலும் இன்று கிராமச்சீர்திருத்த பற்றிய பேச்சு, நகரமேடைகளிலே, பேச்சலங்காரத்துக்காக கேட்கப்படுகின்றது. பலன், காணோம்.

விவசாயத்துக்கு ஏற்றதாக இருந்தும், தரிசாகப் போடப்பட்டிருக்கும் நிலத்தின் அளவு, இந்தியாவில், 11-கோடியே 4 இலட்சம் ஏகராகும். இதனால், நாட்டு வளமும் கெட்டு, வெளிநாட்டிலிருந்துஉணவுப்பொருளை எதிர்பார்க்கும் நிலை இருந்துவருகிறது. தரிசாகக்கிடக்கும்நிலத்தைப் பயிரிடவேண்டியதிட்டத்துக்குப் பெரும் பொருள் செலவாகுமே, அதற்கென்ன செய்வது என்ற அஞ்சுவது தான் சர்க்காரின் போக்காக இருக்கிறது. இவ்வளவு ஏராளமான நிலத்தைத் தரிசாகப் போட்டு வைப்பது, நாட்டு மக்களுக்கு நியாயமாகக் கிடைக்கக்கூடிய உணவை, நாமே பறிக்கிறோம் என்ற பொருள்.

ஐக்கிய மாகாணத்திலே, இப்போது, இத்தகைய தரிசுநிலங்களை விவசாயத்துக்குக்கொண்டுவரத் திட்டமிட்டிருக்கிறார்கள். அதற்கான துவக்கவேலையாக, ஆராய்ச்சி நடத்தி வருகிறார்கள்.

இந்த மாவட்டத்தில் ஐந்து இலட்சத்துச் சொச்சம் ஏகர் நிலம் தரிசாகக் கிடைக்கிறது. இந்தத்தரிசு நிலங்களிலே, இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட ஏகர், காட்டுமிருகங்கள் உலவி, மலேரியா சூழ்ந்து வெள்ளக்காடாகவோ, அல்லது கள்ளிகாளான் நிறைந்தஇடமாகவோ உள்ளன. மற்றுமபல, ஏகர்கள். மாந்தோப்பாகவும் ஜெமீன்தாரின் கட்டைவெட்டும் இடமாகவும், உள்ளன சில இ[illegible] கள் நிலம் மட்ட[illegible] சதுதுள்ளன. இவ்விதம், தரிசாகக்கிடக்கும் நிலத்தின், "ரகங்களை" ஆராய்ந்தறிந்து, எவ்வண்ணம் தரிசு நிலங்களை விவசாயத்துக்குக் கொண்டுவருவது என்பதற்கான முன்னேற்பாடுகளைச் செய்கிறார்கள்.

நமது மாகாணத்தில்,

| மாவட்டம் | ஏக்கர் |
|---|---|
| செங்கற்பட்டு | 4609 |
| வடஆற்காடு | 42 690 |
| தென் ஆற்காடு | 4292 |
| தஞ்சாவூர் | 17 293 |
| திருச்சி | 11 276 |
| மதுரை | 24 390 |
| ராமநாதபுரம் | 2118 |
| திருநெல்வேலி | 4435 |
| கோவை | 72346 |
| சேலம் | 102916 |
| நீலகிரி | 40476 |

ஏகர்நிலம், தரிசாகக்கிடக்கின்றன, என்று சட்டசபையிலே தெரிவித்தார்கள். ஆனால் இவைகளை விவசாயநிலமாக்க ஏதாவது திட்டம் உண்டா? இல்லை! உணவுப்பொருள் உற்பத்தி பெருகவேண்டும். இது ஆள்வோரின் வேண்டுகோள். தரிசுநிலமாகப் பல ஆயிரம் ஏகர்களைப்போட்டு வைத்துவிட்டு, எங்கேயிருந்து உணவுப்பொருளைப் பெருக்குவது? [illegible] பேலவே, [illegible] பார்வை செலுத்த முடியாத அளவு 'நிலபுலம்' வைத்துக்கொண்டுள்ள பெரியபண்ணைகளிலிருந்து, முழுஉற்பத்தியை எப்படிப்பெறமுடியும்? உழவனின் முதுகெலும்பை முறித்து, அவனிடம் ஏராளமாகவிவாங்கி, ஒரு பகுதியைமட்டும் சர்க்காருக்குச் செலுத்திவிட்டு, பெரும்பகுதியைத்தமது "பிரபுத்வத்துக்கு"ச் செலவிடும் போகிகளான ஜெமீன்தார்கள் இருக்கும்வரை, திருப்தியுடன் வாழ்வுநடாத்தும் உழவன் இருக்கமுடியாது, உழவனின் உள்ளத்திலே புயல் இருக்குமானல், வயலிலே [illegible]

(8-ம் பக்கம் பார்க்க)

# தேவலோகத்தில்

## லெனின்!

"லெனினாவது, தேவலோகம் போவதாவது! அந்தமகாபாபியை, மதத்தை நாசம் செய்தவனை, ரௌரவாதி நரகத்திலல்லவா தள்ளுவார் கடவுள்" என்று, நமது மடிசஞ்சிகள் சொல்லும், சீற்றத்துடன்.

"தேவலோகமாவது இருப்பதாவது; அங்கேஒருவர்போவதாவது; இதெல்லாம் வீண்கதைதானே" என்று நம்மவர் கூறுவர்.

ஆனால், கவிஞர்கள், யாரையும் எங்கே வேண்டுமானாலும் அழைத்துச்செல்லும் உரிமையும் திறமையும் பெற்றவர்களல்லவா! எதையும் சிருஷ்டிக்கவும் அவர்களால் முடிகிறது!

கவி அரசர் இப்பால், லெனினைத் தேவலோகத்துக்கு அழைத்துச்செல்கிறார்!! தெரிசனம் செய்யவா? இல்லை! கேள்விகள்கேட்க! தேவன் என்ன செய்கிறார்? லெனினை,நெற்றிக்கண்ணால்சுட்டெரிக்கிறாரா? இல்லை! லெனின் கூறியமொழியின்உண்மையைஉணர்ந்து, புதியதோர் உலகு செய்க! என்று புதுக்கட்டளைபிறப்பிக்கிறார்.

கற்பனைக்கவிதைதான், ஆனால் கருத்தாழமும், பலனளிக்கும் தன்மையும்கொண்டது. கவிதையை, 'உரையாடல்' முறையிலே, இங்கு எடுத்துக்காட்டுகிறோம்.

இடம்:— தேவலோகம்.

பாத்திரங்கள்;— லெனின்
தேவதூதர்
கடவுள்.

லெனின்:— (கடவுளை நோக்கி)

உயிர்களிடையே உன் சக்தியை உணர்ந்தோம்
நீ எங்கு மிருப்பவன், என்று மிருப்பவன்,
எனினும் அதைநான் எங்ஙனம் அறிவேன்?
இன்று கண்ணால் கண்டபின் உணர்கிறேன்........
நீ யாருக்குக் கடவுள்?
வானத்தினடியிலுள்ள வையகத்தோருக்கா?
கீழ்நாட்டினர்க்கு மேல்நாட்டு வெள்ளையனே தெய்வம்.
மேல்நாட்டினர்க்கு மின்னும் பொன்னே கடவுள்....
நீ யாருடைய இறைவன்?
இவ்வறிவும், கல்வியும், ஞானமும், தந்திரமும் உயிரை
உறிஞ்சியபடியே
சமத்துவம் பேசுகின்றன.
நீ சர்வ வல்லமையாளன், நீதிவான்,
ஆனால்
உன் உலகிலோ
தொழிலாளியின் துயருக்கு எல்லையில்லை.
முதலாளித்துவக் கப்பல் அழிவதென்று?
உன் உலகம்
விடுதலைநாளை வேண்டித் தவிக்கிறது.

தேவதூதர்:— (கடவுளை நோக்கி)

அறிவு இன்னும் கட்டுப்பாடற்றதாகவில்லை
அன்பு ஒரு சிலரின் உரிமையாகவில்லை
எனினும்
தெய்வீகச் சைத்ரீகனே,
உன் சித்திரத்தில் சோபையில்லை.
காலடியும், மதத்தலைவனும், மீரும், பீரும்
மானிடர் பாதையில் வலை விரித்துள்ளனர்,
உலகில்
பழையமுறை இன்னும் மாறவில்லை.

கடவுள்:— (தேவதூதர்களை நோக்கி)

எழுங்கள்
உரிமையிழந்து உணர்ச்சியற்று உறங்கும்
ஏழைமக்களைத் தட்டி யெழுப்புங்கள்!
பணக்காரர் கோட்டைகள்
அடியோடு அதிர்ந்து சாயட்டும்
அடிமைகளின் குருதியை
உணர்ச்சி உயிர்கொண்டு ஓடச்செய்யுங்கள்
எளிய ஊர்க்குருவி
இராஜாளியை எதிர்க்கப் பலமளியுங்கள்!
மக்களாட்சிக்கான
மாட்சிமிக்க நாள் நெருங்கிவிட்டது
பழைய சின்னங்களை
எங்கு காணினும் துவம்சம் செய்யுங்கள்!
உழவன் உணவுக்கு உதவாத கழனி
எங்காவது இருந்தால்
அதில் ஒருதானிய மணிகூடமிஞ்சிடாதபடி
நெருப்பிட்டுக் கொளுத்துங்கள்.
கோயில்கள், மசூதிகளின்
விளக்குகளை அணைத்துவிடுவதுகூட நன்று
சலவைக் கற்களாலாய
இப்பிரார்த்தனை ஸ்தலங்களை
நான் வெறுக்கிறேன்
என்னைப் பிரார்த்திக்க
மண்ணாலான குடிசைகள் எழட்டும்.
நவீன நாகரீகமென்பது
கண்ணாடித் தொழிற்சாலை
கீழ்நாட்டுக் கவிஞனுக்கு
வெறியை ஊட்டுங்கள்
அவன் அதை நொறுக்கி எறிவான்.

---

# திருமண அழைப்பு

—(o)—

எனது திருக்குமாரன்,
தோழர் பாஸ்கரன் B. A.,
தோழர் S. A. அண்ணாமலையார் திருக்குமாரி,
தோழியர் ஞானம்பிகை அம்மையாரை
27—1—47 அன்று, உசிலம்பட்டியில் திருமணம்,
செய்துகொள்ளும் விழா நடைபெற இருக்கிறது.
அன்பர்கள் விழாவினுக்கு வந்தருள
வேண்டுகிறேன்.

தங்கள் அன்பன்,
W. P. A. சௌந்தரபாண்டியன்.

## இசைவாணர்கள் படத் திறப்பு விழா.

15—1—47 புதன்கிழமை மாலை 6 மணிக்கு மன்னார்குடி கீழராஜவீதி அருணகிரிநாதர் மடாலயத்தில் தோழர் கே. எஸ். கருப்பையா அவர்கள் தலைமையில் காலஞ்சென்ற காஞ்சிபுரம் சங்கீதவித்வ முடி மன்னர் நாயினா என்கிற சுப்பிரமண்ய பிள்ளை அவர்கள், மன்னார்குடிநாதஸ்வர வித்வ திலகம் சின்னபக்கிரியா பிள்ளை அவர்கள், திருச்சி மலைக்கோட்டை வைத்தியரெத்தினம் பிடில் கோவிந்தசாமி பிள்ளை அவர்கள், லயக்ஞான மன்னார்குடி கொன்னக்கோல் வித்வான் பக்கிரியா பிள்ளை அவர்கள், புதுக்கோட்டை கஞ்சிரா தெக்ஷணாமூர்த்தி பிள்ளை அவர்கள் ஆகியோர்களுடைய உருவப் படங்கள் திறந்து வைக்கப்பட்டன.

## காஞ்சிபுரம் டி. மு. கோர்ட்டு

O. S. 24 of 1947
I. A. 62 of 1947

பெருமாகாளத்திமுதலி—1
சிதம்பரமுதலி 2 வாதிகள்

காசி விஸ்வநாதர் கோயில்
எக்ஸிகியூடிவ் டிரஸ்டி

குப்புசாமிமுதலி— பிரதிவாதி

ஷை கெ. வாதிகள் கருக்குப்பேட்டை செங்குந்தஸ்திர வாசிகளுக்குப் பிரதிநிதிகளாக ஷை கிராம தோப்பு மகசூல் விஷயமாய் தாவா செய்ய மனுகொடுத்து 1–2–1947-ல் வாயிதா போடப்பட்டிருக்கிறது. ஆட்சேபனையுள்ளவர்கள் கோர்ட்டில் தெரிவித்துக் கொள்ளவும். தவறினால் ஒருதலையாகத் தீர்மானிப்பார்கள்.

K. கிருஷ்ணசாமி ஐயங்கார்
வாதிகள் வக்கீல்


## முத்தமிழ் நிலையப் புதிய வெளியீடுகள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| 1. எ. தாழ்ந்த தமிழகமே (சி. என். அண்ணாதுரை M. A. அவர்களின் பேருரை) | 0 | 8 |
| 2. தமிழர் யார்? | 0 | 8 |
| 3. ஆரியர் தமிழர் கலப்பு | 0 | 8 |
| 4. தமிழ் பழமையும் புதுமையும் | 0 | 8 |
| 5. ஆரியவேதங்கள் | 0 | 10 |
| 6. தமிழர் சமயம் எது? | 0 | 8 |
| 7. மரணத்தின் பின்? | 0 | 8 |
| 8. சமணமும்சைவமும் | 0 | 8 |
| 9. உலகக்கலை உயர்வுக்கு உதவியவர் யார்? | 0 | 8 |
| 10. இராவணன் வித்தி யாதரனா? | 0 | 6 |
| 11. இராவணகாவியம் | 6 | 0 |
| 12. நாடகக்கலைமலர் (226 பக்கம்) | 2 | 0 |
| 13. நடனசுந்தரி (திரைஒலி ஆசிரியர்) | 1 | 0 |
| 14. பெண்கள் உலகம் | 0 | 14 |

கிடைக்குமிடம் :—
முத்தமிழ் நிலையம்,
75, வரதா முத்தியப்பன்தெரு,
சென்னை,

"முருகு"
தமிழ் இலக்கியத்
திங்கள் வெளியீடு
தமிழ் நாட்டின் தலைசிறந்த
பல அறிஞர்கள்
எழுதுகிறார்கள்
விரைவில் வெளிவருகிறது
எதிர்பாருங்கள்
எல்லாஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை.
விவரங்களுக்கு;—
முருகு
69, நயினியப்பன் தெரு
மண்ணடி சென்னை

2-ம் பக்கத் தொடர்ச்சி

குப் பிறக்கும் பிள்ளைக்கே அயோத்தியாராஜ்யம் கிடைக்கச் செய்கிறேன் என்று கூறிச், சத்யமே செய்துவிட்டாராம் பார் தம்பி! சமயத்திலே எற்றபடி நடக்கும் தந்திரத்தை கைகேயி அதே எண்ணத்தோடு தானே இருந்திருப்பாள் பிறகு, மூத்தமகனுக்குத் தானே பட்டம் என்று அயோத்திராஜா சட்டம்பேச ஆரம்பித்து விட்டாரல்லவா? கைகேயி, என் தங்கை தங்கம் போல. கிழட்டு அரசனின் காமப் போக்கை உணர்ந்தவள். ஆட்டிப் படைத்தாள். இன்று உலகம் ... தவிர, கிழட்டு அரசன் ஒரு இளம் பெண்ணைக் கலியாணம்செய்து கொள்ளவேண்டுமென்று ஆசையால், இது தருவேன் அது தருவேன் என்று சொல்லி நம்பவைத்தானே; ஆசை காட்டினனே; பிறகு அவளை மோசம் செய்யத் துணிந்தானே; இது சரியா, என்று உலகம் கேட்கிறதா? இல்லையே. அதுபோலத்தான் அந்தச் சிந்தாமணியை வசியப்படுத்த இவர் என்னென்ன ஆசை காட்டினரோ? நம்பும்படி செய்வதற்காக எவ்வளவோ வாக்குறுதிகள் தந்துதான் இருப்பார். அந்தப்பேதையும் அதனை நம்பி ஏமாந்துதான் போயிருப்பாள் ஆயிரம் தடவை ராமாயணம் படித்தாலும் இரத்தச்சூட்சமத்தை எங்கே உணரப் போகிறார்கள் பெண்கள். ராதா அடிக்கடி சொல்லுவான். ராமாயணத்தை நான் புதியமுறையில் எழுதப்போவதாக! இதை எல்லாம் எண்ணினதால் எனக்குச் சிந்தாமணி மீது இருந்த கோபம்கூடக் கொஞ்சம் குறைந்தது. வீட்டுக்குள் சென்றதும் கிழவி, என் முகத்திலே முன்புபோலக் கோபக்குறி அதிகம் இல்லாததைக் கண்டு, என்ன விஷயம்? அக்காவும் தங்கையும் சேர்ந்து விட்டீர்களா?சரி! சிந்தாமணி இனித் தொலைந்தமாதிரிதான்'' என்று கேலியாகக் கூறினள். "இதற்குள் சொல்லிவிட முடியுமா? தங்கம், இனிமேல் தானே போர் ஆரம்பமாகும்!'' என்று நான் சொன்னேன். "நீயும்கூடச் சேர்ந்தேபோர் நடத்தினலும் உங்கள் எதிரே சிந்தாமணி வரமாட்டாள்.'' என்ருள் கிழவி. "ஏன்?'' என்று கேட்டேன். "அடி பைத்யக்காரி! நானும் பைத்யம்தான். சிந்தாமணியும் சிந்தாமணியும்; வேடிக்கை, வேடிக்கை.'' என்று கூறிக்கொண்டே சிரித்தாள் கிழவி. "என்ன வேடிக்கை! என்னபைத்யம்! என்ன சொல்கிருய்?'' என்று பனதபதைத்துக் கேட்டேன்.

"இவ்வளவு சிரமமும் வீண். சோகமடைந்ததும் வீணவேலை. தங்கத்திடம் போனதும் வீண்வேலை'' என்று கிழவிகூறினள். "வீண்வேலையா? எப்படி? சிந்தாமணி ஏற்கனவே வந்தாகிவிட்டதா?'' என்று நான் சீற்றத்துடன்கேட்டேன். "உட்காரம்மாஉட்கார்! சிந்தாமணிமீதுபோர் தொடுக்க வேண்டிய அவசியமே இல்லை. சக்களத்தியும் அல்ல, சாகசக்காரியுமல்ல. சிந்தாமணி, பெண்ணல்லடி, வைத்யமே! என்ருள் கிழவி.

(தொடரும்)

## வெள்ளையராகு படலம்!

நாட்டு விடுதலை வரலாற்றுச் சுவடியிலே இப்போது, புதிய படலம், அவசர அவசரமாகக் கோர்க்கப்படுகிறது — அதற்கு வெள்ளையராகு படலம் என்று பெயரிடவில்லை — எதிர்காலம் அந்தப்பெயரே சூட்டும் — அதற்கான அறிகுறி வார்த்தைஇன்று பேசப்பட்டாகிவிட்டது.

பம்பாய்க் கடற்படையினர் புரட்சி என்று பிரபல்யமானசம்பவம் அன்பர்களின் நினைவிலிருக்கும். அது குறித்த இடைக்காலசர்க்கார்நியமித்தவிசாரணை முடிந்தது. விசாரணையின் முடிவு பற்றி, அருணா ஆசப்அலி ஓர் விமரிசனம், விடுத்துள்ளார்கள். "இந்திய கடற்படை சம்பந்தமான விசாரணை முடிவுகளைநிறைவேற்றுவைக்க இடைக்காலசர்க்கார் (நேரு சர்க்கார்) எடுத்துக் கொண்டுள்ள முறையைக் கவனித்தால், அது வெள்ளைக்கார வாடை வீசுவதாக இருக்கிறது. வேலை இழந்தவர்களைத் திருப்பி எடுத்துக்கொள்வதாக, இன்று இடைக்கால சர்க்காரிலேஉள்ள பிரபல தலைவர்கள் வாக்குறுதி அளித்த பிறகே கடற்படையினர் சரண் அடைந்தனர்.

இடைக்கால சர்க்காரிடமிருந்து நியாயமான வழிவகை கிடைக்கும் என்று எதிர்பார்த்தவர்கள் ஏமாற்றமடைவார்கள்

சுருக்கமாகக்கூறுவதானல்.
கடற்படையினருக்குக்
கொடுத்த வாக்குறுதி
காற்றில்விடப்பட்டது.
இடைக்கால சர்க்காரின்
போக்கு, ஏமாற்றத்தை
அளிக்கிறது.

வெள்ளைக்கார வாடை வீசுகிறது!

என்பவைகள் அருணவின் விமர்சனம். அம்மையார் கடற்படை சம்பந்தமான காரியத்திலே காங்கிரசார்கொண்டுள்ள போக்கிலே மட்டுமல்ல, இடைக்கால சர்க்காரிலே உள்ளவர்களின் போக்கிலே மட்டுமல்ல, மாகாண சர்க்காரை நடத்தும் காங்கிரஸ்காரர்களின் போக்கிலே கவனித்தாலும், இந்த வெள்ளைக்கார வாடை வீசிடக் காணலாம்!

வெள்ளையராகு படம்! இது போது நிகழ்வது. ஆளவந்தார்கள் ஆங்கிலமுறையை, அனுபவபூர்வமாக அறிந்தவர்கள்,அதனை அப்பு அழுக்கின்றி பிரயோகிக்கிருர்கள்.

நாள் தவருமல் பத்திரிகைகளிலே வருகிற செய்திகளைத் தொகுத்துப் பார்த்தால் நன்கு விளங்கும்.

144
தடியடி
ஜாமீன்
சிறை
துப்பாக்கிப் பிரயோகம்
புகைக்கண்ணீர்பிரயோகம்
பத்திரிகாலய பரிசோதனை

இவைகள், தாராளமாகக் கிடைக்கின்றன. அரிசியும் ஆடையும் மட்டுந்தான் அளந்து தருகிருர்கள் அதிகார நடவடிக்கைகளைத் தாராளமாகத் தருகிருர்கள்.

சென்னை இந்த வெள்ளையராகுபடத்திலே ஜெகஜ்ஜோதியாகவிளங்குகிறது. முதலமைச்சரின் பெயரே பிரகாசம்!ஜோதி இல்லாமற் போகுமா? அவசரச் சட்டமே பிறந்து விட்டது! சென்னை, மதுரை, திருச்சி,பெஜவாடா, மலபார், பல ஊர்களிலே அவசரச்சட்டத்தின்படி, கப்யூனிஸ்டுகள் கைது, பத்திரிகாலயங்கள் சோதனை. அவசரச்சட்டம்! அன்பன்றி வேறோர்சட்டமறியோம் பராபரமே என்று பேசியவர்கள் ஆளவந்தார்கள், அவசரச் சட்டத்தையும் கண்டோம். ஏன்? வெள்ளையராகு படலம் இதுதான். பொதுமக்களின்உரிமைகளைப்பற்றிப்பேசி, அதன் பாதுகாப்புக்காகத்தனிக் கழகமும்கண்ட காங்கிரசாட்சியிலே காண்கிறோம், இக்காட்சிகளை. அருணா அசப்அலி மனம் நொந்து வெள்ளையர் வாடைவீசுகிறதே என்று கண்டிக்குமளவு இருக்கிறது நிலைமை.

இந்தச்சூழ்நிலையிலே பண்டித ஜவஹரின், "சுதந்திர இந்தியக் குடி அரசு'' தீர்மானம் வேறு நிறைவேறி இருக்கிறது!

"ஆள்கிறகட்சி எதுவாகஇருப்பினும், அந்தக்கட்சி, அரசியல் எதிர்க்கட்சிகளை அடக்க அடக்க, அக்கட்சிகளின் பலம் வளரும்'' என்று தஞ்சைக் காங்கிரஸ் தோழர் பூவராகன் கூறுகிருர். வளரும்! உண்மை! ஆனல் காங்கிரசினிடம் உள்ள இரட்டைக் குழல் துப்பாக்கி அதாவது அதிகாரம்—பிரசாரபலம் எனும் இரு சக்திகள்—கொண்டு கட்சிகளை அழித்துவிடமுடியும் என்றெண்ணுகிருர்கள்.அப்படித்தான்எண்ணம் செல்லும். சகஜம்.

புலிவேட்டை ஆடப்போனவன், புலியைக்கொல்ல முடியாது போனலும், மற்றவர்கள் மீது புலிபோட்ட பாயக் கற்றுக் கொண்டு, ஏலே! என்னைச்சாமான்யமாகக் கருதிவிடாதே நான் புலியைவேட்டையாடியவன், தெரியுமா? என்று கேட்பான், ... பேச்சொல்லும் ... வெள்ளையரை எதிர்த்து ... இன்று வெள்ளையரின் முறையைக்கையாள்கிருர்கள். ஆகவேதான் அருணா கூறுகிறபடி "வெள்ளையர் வாடை'' வீசுகிறது.

## சுடச்சுட!

பஞ்சாபில், கைசிராய் நிர்வாக சபை மாஜி அங்கத்தினர் பிரோஸ்கான் நூன் உட்பட, பிரபல லீக் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.

* * *

முஸ்லீம் லீக், தனி அரசியல் நிர்ணய சபை கூட்ட முயற்சிக்குமென்றும், பிரிட்டிஷ் அறிக்கையிலேயே இதற்கு உரிமை இருக்கிறதென்றும் கூறப்படுகிறது

* * *

எந்தத் தனி மாகாணமும, இன்னெரு மாகாணத்துடன் இணைந்திருக்க விரும்பாமல் தனித்திருக்க விரும்பினல், தனியாகவே இருக்கலாம் என்று காந்தியார் கூறுகிருர்.

* * *

திருவாங்கூர் தடை உத்தரவை மீறப்போவதாக, தோழர் அசோக் மேத்தா, திவான் சர். சி. பி. க்கு அறிக்கைவிடுத்திருக்கிருர்.

* * *

மாகாணமெங்கும அமுலுக்கு வந்துள்ள அவசரச்சட்டம், பொதுஜன அமைதியையும் சாந்தத்தையும் காப்பாற்றச் சர்க்கார் மேற்கொண்ட நடவடிக்கையாகும், ஆனல் இதை மிக ஜாக்ரதையாகப் பரிசீலித்து உபயோகிக்கவேண்டும் என்று காங்கிரஸ் ஏடு தினமணி எழுதுகிறது.

* * *

அரிஜன ஆலயப்பிரவேசத்துக்கான முஸ்தீபுகளுடன, ஆழ்வார்திருநகரி சென்ற மந்திரி கோடி செட்டியார், கோயில் கதவைப்பூட்டிக் கொண்டு வைதிகர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்யக்கண்டு, வீடுதிரும்பினர்.

* * *

"நாட்டிலே நானவிதமான குழப்பங்களும், தொல்லைகளும் இருக்கட்டும் ஸ்வாமி! அவசரச்சட்டமாவது வரட்டும், அதி அவசரச்சட்டமாவது பிறக்கட்டும். நமக்கு இருந்த கவலை தீர்ந்தது, அதைக்கவனிச்சியளோ?'' என்று கேட்டார். குப்பணுச்சாரி. "என்ன ஓய், விசேஷம்?'' என்று ஆவலுடன் கேட்டார் ரங்காச்சாரி. "நம்மவூர்லே இனி இட்லி போடலாமாம்ஓய்! ஆர்டர்செய்தாச்சி''என்ருர்குப்பணுச்சாரி. "அட சக்கே!அப்படியானுஇன்னும் ரெண்டு அவசரச் சட்டமும்பிறப்பிக்கட்டும் ,கவலையே வேண்டாம், சூடானஇட்லியைப்போட்டுண்டேகோராமா கிருஷ்ண கோவிந்தான்னு இடப்போம்,' என்கிருர் ரங்காச்சாரி. கும்பகோணத்தில்.



கிளி மார்க்
பட்டணம் பொடி.
நிறம் காரம் மணத்தில் நிகரற்றது
இன்றே உங்கள் தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள்.
ஏ.எஸ்.ராஜன் அண்டு கம்பெனி,
தபால்பெட்டி நெ. 1155.
பழையவண்ணாரப்பேட்டை,சென்னை.

# பைந்தமிழ் பகரும் பார்ப்பனர்

—(ஃ)—

வித்வான் வி. அ. அரங்கசாமி
விரிவுரையாளர் கரந்தைப்புலவர் கல்லூரி கரந்தை.

பைந்தமிழ், செந்தமிழ், வண்டமிழ், ஒண்டமிழ், நற்றமிழ், இன்றமிழ், தீந்தமிழ்என்று சிறப்பிக்கப்படும் பல பெயர்களையுடைய நந்தமிழ் மொழியிற் காணும் தமிழ்மக்களோடு உடை உடை நாகரிகம், கலை, பண்பு, வாழ்க்கை. கருதுங் கற்பு, கணுர் தோற்றம் முதலிய பல வகையினும் மாறு கொண்டு நிற்கும் பார்ப்பனர்களின் பண்புகளைப் பகரவே இக்கட்டுரை தோன்றியது.

மேலும் இக்கட்டுரை ஒரு வாறு இலக்கியங்களின் காலத்தை வரையறுத்துரைத்தற்கு வழி காட்டியாகவும் இலங்கும். எங்ஙனமெனின், சங்க இலக்கியங்களின் காலத்தை அறுதியிட்டுரைத்தற்கு அமைந்த வழிகள் பலவற்றுள் இஃதும் ஒன்றெனக் கோடல் ஏற்புடைத்தாகும். மேலும் ஆரியர் வேறு, தமிழர் வேறு, வடவர்மொழி வேறு வண்டமிழ் வேறு, அந்தணர் செந்தண்மை வேறு, அன்பு தமிழின் அந்தண்மை வேறு, பார்ப்பனப் பண்பு வேறு பைந்தமிழ்ப்பண்பு வேறு; இவைபோன்ற இனிய கருத்துக்களைக் கூறவும் இக்கட்டுரை தோன்றியது. மேலும், ஆரியத் திராவிடப் போராட்டம் அன்று முதல் இன்றுவரை அமைந்துளதென்பதை அன்பு தமிழினின்றும் எடுத்துக்காட்டி அனைவரும் உள்ளம் அமைதி கொள்ளவே இக்கட்டுரை அமைந்தது.

நந்தமிழ்ப் பெருமக்கள் அந்தணரின் அறவுரைகளே, ஆரிய நாட்டினர் ஆண்மையோடியற்றும் சீரிய வாழ்க்கையே பார்ப்பனரின் ஆர்ப்புறு வேதங்களே பழந் தமிழரின் அறவுரைகள், வாழ்க்கை, வேதங்கள் எனத் தம் உள்ளத்தில் பதியவைத்துள்ள பான்மை நீங்கித்தமிழரின் தகவுகளையறிந்து வாழவேண்டுமெனும் ஆக்கமுறு நோக்கத்தினை இக்கட்டுரை உரைக்கப் பட்டுளது. எனவே இவை போன்ற பல கருத்துக்களைக் கருத்திற்கொண்டு இலக்கியங்களிற் காணும் ஆரியரின் சீரிய பண்புகள் அடைவுபட அமைக்க நேர்ந்தது.

பைந்தமிழ் முதலிய தொடர்களால் பல பெயர் பொறிக்கப்படும் செந்தமிழில் முதல் நூலாகப் பழமை வாய்ந்ததாக உள்ளது ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியமாகும். அதற்குப் பின்னர் எழுந்தனவே சங்க இலக்கியங்கள். அவற்றிற் பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு எனப் பகுத்துப் பகர்வர் நூலோர். அமைந்தவற்றுள் பத்துப் பாட்டின்கண்ணுள்ள பத்துப்பாடல்களும் ஒவ்வொரு நூல்போல அமைந்துள. ஆனால் அவையாவும் ஒரு காலத்து எழுந்தனவல்ல, பல்வேறு காலத்தன என்றே பகரவேண்டும். அவைபோலவே எட்டுத்தொகைநூல்களுமாகும். தொகை நூல்கள் யாவும் பல்வேறு புலவர்களால் பாடப்பட்டுள. அவற்றின் அமைந்த செய்யுட்களின் அமைதிஒருபடித்தாக அமையவில்லை. அச்செய்யுட்களில் பிற்காலத்துக் கருத்துக்களும் செறிந்துள்ளன. நல்லியல்பு நவிலும் நல்லிசைப் புலவர் செய்யுட்களும் அத்தொகை நூல்களில் விளங்குகின்றன; மேற்கூறிய நூல்கள் போலவே பதினெண்கீழ்க் கணக்குமாகும். அவற்றுள்ளும் காலத்தால் வேறுபட்டன கலந்துள்ளன. ஆதலால் அவற்றின் அமைந்தகருத்து வேறுபாடுகளின் கருவிகொண்டு கூறுபாடுசெய்து காலத்தை அறுதியிட்டுவைத்துச் செய்யுட்களை அமைத்தலே சிறந்தது; அவற்றின்பின் பெருங்காப்பியங்களும் சிறுகாப்பியங்களும் புராண இதிகாசங்களும், பிரபந்தங்களும் தோன்றலாயின. அவையாவும் கருத்தின் செம்மையால் காலத்தை வரையறுப்பன. இங்ஙனம் அமைந்த நம்பைந்தமிழ்ச் செய்யுட்கள் பகரும் பார்ப்பனர்யாவர்? அவர்தம் பண்பு செயல், பண்பு முதலியயாவை யென இனி ஆராய்வாம்.

பைந்தமிழ்ச் செல்வர்களே! சீரியோராய் வாழும் ஆரியர் வாழ்ந்த நிலையினையும் அவர்கள் இன்று வாழும் சீரியநிலையினையும் முறையே அறிந்து கொண்டு, தமிழர்கள் தம்நிலை இதுவெனத் தேர்ந்து வாழ்க்கை நடாத்த ஏதுவாகும் எனத்துணிந்தே, பைந்தமிழ்க்கூறும் பார்ப்பனர் நிலையினைப் பகர்கின்றேன்.

முதற்கண், ஆரியர் இந்நாட்டு மக்களல்லர். இந்நாட்டில் வாழ்வினை நடத்திவந்த வகையினர். இங்ஙனம் வந்தபொழுது இந்நாட்டுத் தமிழ் மக்களிடத்துத் தொழில் வகிப்போராய் ஏவல் கேட்பாராய் எண்ணிய வகையில் நண்ணிநின்று எத்தொழிலையும் ஏற்று ஏவல் செய்வோர். இன்முகங்காணுமளவும் நடத்தி ஏற்றம் பெற்றனர். அங்ஙனமின்றேல் ஏவல் செய்வோர் ஏவுவோராய் கூத்தாடிப்பிழைத்தோர், கூத்தாட்டி அழைப்போராய், பிச்சையேற்றுண்டோர்,பிச்சையிட்டுண்டோராய் தொழில் கொண்டார் தொழில் கொடுப்போராய். காவி உடையர் ஏவும் உடையராய், முக்கோல் கொண்டோர் முடியா சூடையோராய் ,தூது சென்றோர் வாது புரிவாராய்ஏற்றலைக் கொள்வோர் ஆற்றல் மிக்கோராய் எங்ஙனம் வாழமுடியும்? தமிழ் மக்களுக்குத் தலைவில் செயல் பலதக்காங்கு புரிந்து தக்கோராக மிக்குஇலங்கினர்எனக்கூறல்மிகையாகாது. எனவே ஆரியர் எனும் பார்ப்பனர்,அடைந்தோரைக்காக்கும் அன்புடைய இந்நாட்டுத்தமிழர்களுககுப் பாங்கனாய் நின்று பணிபுரிந்துள்ளனர். அகப்பொருளில் தலைவனாக வரும் நந்தமிழ் மகனுக்குற்ற துணைவனாய் ஊறுபாடுகளைப் போக்கும் உண்மைத் தோழனாய் நிற்பவர் நந்தமிழ்ப் பாங்கனே. பார்ப்பனப் பாங்கன் அவ்வாறல்லன். தலைவன் செப்பியவற்றைச்சென்றறிவிக்கும் பாங்கனாகவேவிளங்கினன். நன்றுந்தீதும்ஆராய்ந்து உறுதி கூறும்ஒருபெருந்தோழன் பாங்கன் என்ற பெயருடையானே ஆவான். தமிழிலக்கியங்களிலே, தலைவன் தலைவியைக் கண்ணுற்றுக்காதலர் சேர்ந்து பிரிந்தான்; இரண்டாம்நாள் தன் காதலைத்தன் பாங்கற்குப் பலபடப் பணித்துரைத்து நிற்றலும் பாங்கன் கழறியுரைத்தலும் ,தலைவன் கழற்றெதிர் மறுத்தலும் பின் தலைவனோடு ஒன்றி நின்றுரைத்து அவன் துன்பினைப் போக்க முயன்று அவ்வண்ணமே செய்து முடிக்கின்றான் பாங்கன். இங்ஙனம பாங்கன் பார்ப்பனன் என்ற இருவரும் கழறியுரைக்கும் கருத்துக்கள் மாறுபட்டுள்ளன.

(தொடரும்)

## திருமண அழைப்பு

27—1—47 காலை 9-30க்கு

எனது தலைமகள் திருச்செல்வி

சரோஜனி அம்மைக்கும்

திருச்சி திரு. சண்முகனார் இளவல்

வி. ஒ. அமிர்தராஜன் M. A.க்கும்

திரு. வி.க. தலைமையில் தமிழ்முறைத் திருமணம்நடைபெறும். நாவலர் சோமசுந்தர பாரதியார் சொற்பொழிவாற்றுவார். அன்பர்களை வருமாறு அழைக்கின்றேன்.

தங்கள் அன்பிற்குரிய
கி. ஆ. பெ. விசுவநாதம்.

## நாடு எப்படிப் பிரிக்கப்பட வேண்டும்?

(1) பஞ்சாப், சிந்து, பலூச்சிஸ்தான், வட மேற்கு எல்லைப்புற மாகாணம், காஷ்மீரம் ஆகிய 5 பிரதேசங்கள் அடங்கிய மேற்குப் பாக்கிஸ்தான் நாடும், வங்காளம், அஸ்ஸாம் ஆகிய பிரதேசங்கள் அடங்கிய கிழக்குப் பாக்கிஸ்தான் நாடும் முஸ்லிம் சமுதாயத்தின் தேசியத்தாயகமாக. தனிச் சுதந்தர நாடுகளாக அமையவேண்டும்.

(2) ஐக்கிய மாகாணம், பீஹார், மத்திய மாகாணம், பம்பாய் ஆகிய 4 பிரதேசங்கள் அடங்கிய இந்துஸ்தான் தனிச் சுதந்திர நாடாகஅமைய வேண்டும்.

(3) சோட்டா நாகபுரி, கிழக்கு ஸ்டேட்ஸ் ஏஜென்ஸி பிரதேசங்கள் அடங்கிய ஜார்க்கண்டு நாடு ஆதிவாசிகளின் (மலை வாசிகள்—பழங்குடிகள்) சுதந்தரத் தாயகமாக அமைய வேண்டும்.

(4) திராவிட நாடு (சென்னை மாகாணம்) தென் இந்திய திராவிடர்களின்—பிராமண ரல்லாதாரின்—தனிச் சுதந்தரத் தாயகமாக அமைய வேண்டும்.

(5) சமஸ்தானாதிபதிகளின் பிரதேசங்கள் தனிப்பட அமைந்திருக்க வேண்டும்.

இவ்வாறு 5 வகையாகத் தனிச் சுதந்தர நாடுகளாக அமையும் நாடுகள் ஒரு கூட்டு ஐக்கிய முன்னணி ஏற்படுத்தி வைத்துக் கொள்ளவேண்டும். அதாவது, இந்தியாவிலும் சமஸ்தானங்களிலும் உள்ள எல்லா மக்களுடைய சுதந்தரம் உரிமைகள் முதலியவற்றைப் பாதுகாப்பதற்காகவும், பிற தொல்லைகள்ஏற்படாமல்கூட்டுப் பாதுகாப்பு ஏற்படுத்தி வைத்துக் கொள்வதற்காகவும், இந்தியாவின் மேற்படி சுதந்தர நாடுகளும் சமஸ்தானங்களும் தாங்களே சுயமே மனப்பூர்வமாகச் சேர்ந்துகொள்ளும்வகையில் ஒரு கூட்டு ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

["ஈஸ்டர்ன்டைம்ஸ்" லாகூர்]

5-ம் பக்கத் தொடர்ச்சி

முடியாது. எனவே நாட்டுப் பொது நலனைக் கவனித்தால் இந்த நிலப்பிரபுத்வமுறை,காட்டுராஜாமுறை ஒழிக்கப்படவேண்டும், அப்போதுதான், உரிமை பெற்று உவகையுடன் உழவன் உழைப்பான்; வளம் பெருகும்; வாழ்வுமலரும். ஊராள்வோரின் கண்கள், இந்த ஏர்முனைப்பிரச்னையில் செல்லவேண்டும்; செல்வதென்றால், சட்டத்தை நிலைநாட்ட என்றமுறையிலே; அல்ல ஏர்முனை, போர்முனையாகமாறுதபடி, கேடுகளைவோம்; புதிய கணக்குப் போடுவோம் என்ற முறையில். நாடாள்வோருக்கு இந்த நற்கருத்து தோன்றுமா? விரைவில்! விபரீதநிலைமை வளருமுன்!

Edited Printed and Published by C. N. Annadurai, M.A., at "Dravida Nadu" Press, 317-319 Hodgsonpet, Conjeeveram